Regd. No. M. 4593. "KUDI ARASU" 16 பக்கம்

குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-
சிலோனில் ,, ரூ. 0-

மாலை 17 } சனிரோ, 17-6-1944 ஆனி-மீ 4௨ {

டாக்டர் சுப்பராயனுக்கும் பி. டி. ராஜனுக்கும் கைவல்யம் கடிதம்

IV

விரிந்த வாழ்வும் பிர்ம்ம ஞானமும் சூத்திரனுக்குக் கிடையாதென்று வேதஸ்மிருதி இதிகாசங்களைக் கொண்டு விதிபோட்டார்கள்; அவைகள் கடவுள் சொன்னதென்று சொல்லி ஜனங்களை நம்பச் செய்தார்கள். அதை மீறினவர்கள் அவதாரக் கடவுளென்கிற ராமனால் தலை வெட்டப்பட்டனரென்கிறார்கள். இராமயணத்திலுள்ள சம்பூகன் கதையே இதற்கு சாட்சி. தெய்வமே ராஜாவாக அவதாரம் பண்ணி அறிவின் வழி சென்ற சூத்திரன் தலையை வெட்டி நடந்து காட்டியிருக்கையில் மற்ற இராஜாக்களும் அவ்வழிதானே நடக்கவேண்டும். இராமன் கதை எழுதினதும் அதற்காகத்தானே. உங்களையும், எங்களையும் சூத்திரர்கள் என்று தெய்வம் அன்று சொன்னதுபோல இன்னும் சொல்லுகிறதே? அதை அந்தக் காலத்து மிட்டா, மிராஸ், பண்ணைகளெல்லாம் ஒத்துக்கொண்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. கால சக்தியின் ஆதரவாகப் பிரிட்டிஷ் ஜாதி நம் நாட்டுக்கு வந்திருக்கும் இந்தக் காலத்தில் மிட்டா, மிராஸ், பண்ணைகள் நம்மை பயமுறுத்திக் கொண்டிருந்த பழம் பூச்சாண்டிக்குப் பல்லைக் காட்டுவதுதான் ஆச்சரியம். பலகாலமாக நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்

தற்கு முக்கிய புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் மூன்று காரணங்களை முன் சொன்னேன். பொதுவாக பலருக்குத் தெரிந்தும் சொல்லியும் வரும் ஒரு காரணமுண்டு. அது நாலாவது காரணம். இந்தக் காரணங்களுக்கு மேலுள்ள காரணங்கள் சேது பிள்ளை புலவருக்குத் தெரியலாம். எப்படி எனில், ஆரிய நாட்டைத் தமிழ் நாடாக்கக் கண்டான் கம்பன் என்கிறார். கம்பர் என் கண்டார்? எப்படிக் கண்டார்? அதற்காக என்ன செய்தார்? என்கிறதை விபரமாகச் சொல்லிவிட்டால் நாங்கள் சொல்லுவதும் அவர் சொல்லுவதும் ஏகதேசம் ஒத்துப்போகலாம். அதை உங்களுக்குக்கூடச் சொல்லியிருக்க மாட்டார் என்று நினைக்கிறோம். கம்பர் இலக்கிய இலக்கணமும், கவி அழகும் அதில் ஒழுகும் தேனையும் தான் சொல்லியிருப்பார். அதையும் சொல்லச்சொல்லுங்கள். அவர் படித்தவர். பண்டிதர்கள் ஒரு விஷயம் சொன்னால் அதை விபரமாய் எல்லாருக்கும் விளங்கும்படியாய் சொல்லுவதுதான் முறையும் நியாயமுமாகும்.

நாலாவது காரணமாவது: இராவணாதி ராட்சதர்களால் ஏற்பட்ட துன்பங்களுக்காக தேவர்கள் மகா விஷ்ணுவிடம் முறையிட்டார்கள். முறை கேட்டு, நீங்களெல்லாம்

சொன்னார். தேவர்களெ
குரங்குகளாகப் பிறக்
தேவர்கள் குரங்குகளாய்ப்
தற்கு முன்னமேயே சா
வாலி, சுக்கிரீவன் முதலிய
கள் இருந்ததாக கதையால்
கிறது. எப்படி இருந்தாலு
கூடி குரங்கு சேனை
ரண்டு வெள்ளம். ஒரு
மென்பது யானை ஆயிர
பதினாயிரம், அடப்பரி ஒ
சேனை காவலர் ஆயிர
ஆயிரமாம். இத்தனையும்
ஒரு பதாதி, இது நூற
டது ஒரு அக்ரோணி, இ
கொண்டது ஒரு வெள்
படி எழுபத்திரண்டு
இவைகளனைத்தும் கிஷ்கி
எப்படி இருந்தது? இட
இலங்கைக்கு போயிற்றே
திடமெங்கே? இத்தனைக்
தனை காய்கனி வேண்டு
யனைத்தையும் இராமர் க
றிற்கே விட்டுவிடுவோம்.

அந்தக் குரங்குகளில்
கிரீவன், அனுமான், ச
முக்கிய குரங்குகள். சா
நாடிக் குரங்கு, பிர்ம்ம
கும் நாடிக்கும் பிறந்தவ
வன் விஷ்ணுவிடம் போ
மூன்று முறை உலகத்தை
வந்ததினால் சாம்புவ
வடைந்து வாலியிடம் வ
தான். நம்முடைய தெய்வ
மும்மூர்த்திகள் அவர்க
ஜாதி பிள்ளைகள் மு
களின் பிறப்பு இறப்பு
லீலைகள் முதலியவைகளை
கண்ணால் கண்டதாக
சஞ்சீவி மருந்துக்கு அ

காலங்களைச் சொல்லுவது.

அனுமான் பிறப்பாவது: கேசரி என்கிற ஒரு ராட்சதனுக்கு ஆஞ்சனை என்கிறபெண்ணிருந்தாள். அந்தப்பெண்ணைக் கேசரி என்கிற வானர வீரனுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்தான். குழந்தை இல்லாததினால் ஆஞ்சனை தபசுக்குப் போனாள். அவளுக்கு வேண்டிய ஊழியத்தை வாயுபகவான் செய்து கொண்டிருந்தார். சிவபெருமானும் பார்வதியும் தேசம் சுற்றி வருகையில் திருவேங்கிட மலைக்கு வந்தார்கள். அங்கே ஆண் பெண் குரங்குகள் கூடிக் கொண்டிருந்தன. பார்த்து அவர்களுக்கும் ஆசை உண்டாயிற்று. குரங்கு ரூபமெடுத்துக் கூடினார்கள். வெளிப்பட்ட இந்திரியத்தை இலையில் பிடித்து வைத்தார்கள். அதை வாயுபகவான் ஆஞ்சனைக்குக் கொடுத்தார். அவள் சாப்பிட்டாள். குழந்தை பிறந்தது. அவர்தான் அனுமார். இராட்சதன், வானர ராஜா, ஆஞ்சனை, வாயுபகவான், பரமசிவன், பார்வதி, திருவெங்கிடமலைக் குரங்கு இத்தனையும் சேர்ந்து அனுமார்; பிறந்து சூரியனிடம் வித்தை படித்தார்.

வாலி, சுக்ரீவன் பிறப்பு: இமயகிரியின் அடிவாரத்தில் பார்வதிக்கு ஒரு தோட்டமிருந்தது. அந்தப் பக்கமிருந்த ஒரு ஆண் குரங்கு பார்வதி தோட்டத்திற்கு தப்பி வந்து அங்கிருந்த குளத்தில் தவறி விழுந்து விட்டது. பார்வதி குளமானதால் விழுந்த ஆண் குரங்கு பெண் குரங்காய் விட்டது. இந்தப் பெண் குரங்கின் அழகைக் கண்டு வேதவேள்விக் கடவுளான தேவேந்திரன் மோகித்தான், இந்திரியம் வெளிப்பட்டது. வெளிப்பட்ட இந்திரியம் தேவலோகத்தை விட்டுப் புறப்பட்டு பூலோகத்தில் இமயகிரியிலிருக்கும் பார்...தி தோட்டத்துக் குளக்கரையி...ருக்கும் பெண் குரங்கைக் ...டுபிடித்து வாலில் விழுந்தது. ...டனே வாலி பிறந்தான். அந்தப் ...ண் குரங்கையே சூரியன் ...ர்த்து மோகித்தான்; சூரியன் இந்திரியமும் வெளிப்பட்டது. வெளிப்பட்ட இந்திரியம் சூ...

...லாம் தாண்டி குறி தவறாமல் பூலோகத்து குளக்கரையிலிருந்த பெண் குரங்கின் மார்பில் விழுந்தது. உடனே சுக்ரீவன் பிறந்தான். நமது தெய்வங்களுடைய சக்தியும் சாமர்த்தியமும் பார்த்தீர்களா பாரிஷ்டர்களே! குரங்கையும், கரடிக் குட்டியையும் பிடித்து குட்டி போடும் திறமை வேறு எந்த நாட்டுக் கடவுளுக்காவதுண்டா? நமது நாட்டு கடவுளுக்குள்ள குட்டி போடும் பெருமையை கவியின்பத்தில் கண்டுகளிக்க காவியம் பாடின நமது கவிப் புலமையைப் போல வேறு எந்த நாட்டிலும் கவித்திறமை உண்டா? எல்லா நாட்டுக்கும் சூரியன் ஒன்றா? தனித்தனியா? எப்படி இருந்தாலும் நமது நாட்டுச் சூரியனைப் போல பெண் குரங்கைக் கண்டு மோகித்து, எத்தனை தூரமாக இருந்தாலும் இந்திரியத்தை அனுப்பி குட்டி போடச் செய்வதில்லை. மற்ற நாட்டுச் சூரியன் மற்ற நாடுகளில் அழகான பெண் குரங்குகள் இருக்கிறதோ இல்லையோ பல நாடு பார்த்து வந்த பாரிஷ்டர்களுக்குத்தான் தெரியும். அழகான பெண் குரங்கிருந்தாலும், நம் தெய்வலோகத்து பெரும் தெய்வத்தின் பெண்ஜாதிக்கு பூலோகத்தில் தோட்டமும், குளமும், பண்ணையாரும் மற்ற நாட்டு தெய்வங்கள் பெண்ஜாதிகளுக்கு மிருக்கவேண்டுமே. மற்ற தேசத்து கடவுள்களுக்கு பெண்ஜாதி பிள்ளைகளில்லை. அதனால் இந்திரியத்தை விடவும் குட்டி போடவும் மற்ற தேசத்து தெய்வங்களுக்குத் தெரியாது. நமது சிவபெருமானின் இந்திரியம் இராட்சதப் பெண்ணின் வாயில் பட்டால் சிரஞ்சீவியான குரங்கு பிறந்துவிடுகிறது. பார்ப்பாரின் வேதயாகக் கடவுளான தேவேந்திரனின் இந்திரியம் குரங்கின் வாலில் பட்டால் ராஜாக் குரங்கு பிறந்துவிடுகிறது. சூரியனின் இந்திரியம் குரங்கின் மார்பில் பட்டால் ஆள்வார் குரங்கு பிறந்துவிடுகிறது. பிரமதேவர் பெண் கரடியைக் கட்டிப் பிடித்தால், அல்லா ... அவ... ...க்க

...வதில்லை என்று நீங்கள் ... விர்களென்பது எங்களுக்கு... யும். குரங்குக்கதையிலுள்ள ...க்கிய இலக்கணங்களைக் ... கவி இன்பம் பரவுவதைவிட... குப் புத்தியும் குணமும் பர... கெடுத்தது போதுமென்றே ... மரியாதைச் சங்கம் சொல்லுகிறது. சி. ராஜகோபாலாச்சாரியார் ஒவ்வொரு பிரசங்கத்திலும் அனுமாரை மேற்கோள் காட்டாமலிருப்பதில்லையே. சுயராஜ்ஜியத்திற்குக் குரங்குக் குணம் உபயோகப்படாதென்றே சொல்லுகிறோம்.

இராமாயணம் பிறப்பதற்குள்ள நாலு காரணங்களைச் சொன்னேன். அதிலுள்ள முக்கிய குரங்குகளின் பிறப்பையும் சொன்னேன். இது சரியா? தப்பா? முக்கிய புராணங்களில் உள்ளதா இல்லாததா? என்பவைகளையும் இதற்கு மேற்பட்டு கதையோ புராணமோ கவியோ இலக்கியமோ இருந்தால் ஆரிய நாட்டை தமிழ் நாடாகக் கண்டவன் கம்பன் என்று சொல்லும் ரா. பி. சேது பிள்ளைப் புலவர் சொல்லவேண்டும். அப்பொழுதான் புலவரின் புத்தி விலாசம் எல்லாருக்கும் தெரியும். ஆரிய நாட்டைத் தமிழ் நாடாகக் கண்டான் கம்பன் என்று பிள்ளையவர்கள் சொல்லுவது புலவர்களுக்கு அர்த்தமாகலாம். புலவர்களல்லாத எங்களுக்கும் விவரம் தெரியவேண்டாமா? ஆரிய நாட்டைத் தமிழ் நாடாகக் கம்பன் கண்டு சின்ன திருவடி பெரிய திருவடி வாயுபகவான், சிரஞ்சீவி, தேவ தூதன் என்கிற தெய்வங்களாக குரங்குகளை ஆக்கி வைத்தார். அது அனுபோகம் என்று நாங்கள் சொல்லுகிறோம். அப்படியல்லவென்றால் கம்பன் ஒரு நாட்டில் இன்னொரு நாட்டை ஏன் கண்டான்? எதற்காகக் கண்டான்? கண்டகாட்சி என்ன? லாப நஷ்டமென்ன? என்பவைகளை எல்லாம் சொல்லவேண்டாமா? சொல்லச் சொல்லுங்கள். அது பண்...த் திறமைக்கு ...

ரோஜா முத்தையா

அழிவுக்குப் பின் ஆக்கம்

நமது கீழ் நிலைக்கு ஆரியமே காரணம்

தோழர் கோ. போ. சேதுராமன் பேச்சு

27-5-44-இல் கோமி தாலூகா திராவிட இளைஞர் மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் கோ. போ. சேதுராமன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சில பகுதிகள் வருமாறு:

திராவிடநாட்டுப் பிரிவினையை மக்கள் உணர்ந்து ஊக்கத்துடன் இருக்கும் இக்காலில், முதன் முதலாக நடைபெறும் இத்தாலுக்கா மாநாட்டின் சார்பாக உங்களை வரவேற்கும் பணியை எனக்கு அளித்தமையை ஒரு பெரும் பேறாகக் கொண்டு உளமிகு உவகையடைகின்றேன்.

ஊக்கமுடன் ஒரு ஆக்கவேலையை, செய்யவேண்டுமாயின், அது இளைஞரால் தான் முடியுமென்பது, அறிஞர் பல்லோருடைய கருத்து—ஏன்?, நடை முறை அதுதான். உருவகமான ஒரு ஆக்கவேலை நடக்கவேண்டுமாயின் பற்பல அழிவு வேலைகளுக்குப் பின் தான் முடியுமென்பது என் தாழ்மையான கருத்து. அழிவுக்குப் பின் ஆக்கம் என்பது தான், புரட்சியின் தத்துவம். அழிவு இன்றியே, ஆக்கவேலை நடைபெறுவது அவ்வளவு எளிதான காரியமன்று. புரட்சியினைப் போதித்த, புரட்சியினை நடாத்திய, புரட்சியினைக் கண்ட அறிஞர் கருத்தும் அதுவே. புரட்சி என்பது முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஏற்படுவதுமட்டுமல்ல. ஒரு இனத்திற்கும், மற்றொரு இனத்திற்கும்; ஒரு கொள்கைக்கும், மற்றொரு கொள்கைக்கும்; ஒரு வகுப்பிற்கும், மற்றொரு வகுப்பிற்கும்; ஒரு மொழிக்கும், மற்றொரு மொழிக்கும் கூட புரட்சி நடைபெறும். முக்கியமாக இன்று நம் திராவிடநாட்டில் தலை [illegible]

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டைய திராவிடத்தின் பெருமையை உணரவேண்டும். உணர்வதற்கு முன் நம்மில் ஒற்றுமை நிலவவேண்டும். ஒற்றுமை நிலைக்க, உரமிக்க, தங்கமற்ற, தூயவுள்ளம்! படைத்த இளைஞர்கள் வேண்டும்.

ஆழ்ந்த அரசியலறிவும், விரிந்து பரந்த மனப்பான்மையும், எதிரியும் கண்டஞ்சும் ஏற்றமும், படைத்த நமது தலைவர் பெரியார் அவர்களின் தலைமையை, நாம் பெற்றிருக்கிறோம். அவர் காட்டும் வழியை நாம் கடைப்பிடித்து, அதன்படி நடக்கவேண்டும். நம்முன் நிற்கும் வேலை மிகச் சிரமமானது. ஆயிரமாயிரமாண்டுகளாய், உடலோடு ஊறிப்போன உளுத்த கொள்கையினை விலக்கி, பண்டைய பெருமையினைத்துலக்க பெரும்பாடு படத்தான் வேண்டும். தியாக சிந்தனையுள்ள இளைஞர்கள் தான் இன்றைய திராவிடத்திற்கு இன்றியமையாதவர்கள்.

தோழர்களே! திராவிடர் தமது எதிரிகளாகிய ஆரியர்களை, தங்களுடைய சமுதாயத்தை அடக்கி, ஒடுக்கி அவமானப்படுத்தி வரும் நயவஞ்சகர்களை பூஜித்து வருகிறார்கள். ஆனால் ஜெர்மானியர், சமீப காலத்தில், தங்கள் நாட்டைச்சுரண்டிவந்தயூதர்களை நாட்டைவிட்டே விரட்டிவிட்டார்கள். இவ்வேற்றுமையின் காரணம் என்ன? திராவிடர்கள் தங்களுக்குள் பற்பல சாதிகளைக் கொண்டிருக்கிறார்கள்; ஒவ்வொரு சாதியாரும், மற்றவர்களை தாழ்ந்தவர்களென்றும் தங்களை மட்டும் ஆரியருக்கு அடுத்தபடியில் 'இருப்பவரென்றும் கருதிக்கொண்டு, அறிவு வெளிச்சமின்றி வாழ்ந்து வருகிறார்கள்; கடவுள்கள், மதம், சாதி, குலம், சாத்திரங்கள், புராணங்கள், கலைகள் எவ்பவற்றின் பெயரால் நமதருந்திராவிடப் பெருங்குடி மக்கள் சூழ்ந்திருக்கிறார்கள்.

ஆரியர்கள் சிறு கூட்டத்தினராயிருந்தும், இந்த நாட்டுப் பெருங்குடி மக்களை பல நூற்றாண்டுக [illegible] மை [illegible] போக

ணமான ஒற்றுமையே. ஆனால் நம்மிடையே ஒற்றுமை கிஞ்சிற்றேனும் இல்லாத காரணத்தால் உண்மைச் சுரண்டல்காரர்கள் யார் என்பதை மறந்து தேசியம் பேசி வருகிறோம். உண்மையை நேர்க்குமிடத்து நம்மை அடிமை கொண்டிருப்பது ஆரியமே அல்லாது, அந்நிய ஆட்சி அல்ல. ஆரிய மோகத்தில் சிக்குண்ட நமதருந் தமிழர்கள் சிலரே நமது கீழ்நிலைக்குக் காரணம் அந்நிய ஆட்சி என்று சொல்லி, நமது தாழ்மைக்கும், இழிவுக்கும் காரணமாயுள்ள ஆரியத்தை நிலை நாட்ட மறைமுகமாக பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நோக்கும் போது வருந்தாமலிருக்க முடியவில்லை.

என்று ஆரியம் இந்தநாட்டில் ஆதிக்கம் செலுத்த வந்ததோ, அன்றுமுதல் சமீபகாலம் வரையில் நாம் இன உணர்ச்சி அற்றவர்களாகவே இருந்து வந்திருக்கிறோம். இனியாவது நமக்குள்ளே இருக்கும் பேதா பேதங்களையொழித்து, 'திராவிடர்' என்ற இன உணர்ச்சியோடு ஒற்றுமைப்பட்டுத் 'திராவிடநாடு திராவிடருக்கே' ஆக பாடுபடுவோமாக. இந்த முயற்சியில் இரத்தம் சிந்த நேரிடுவதாயினும், அதற்கும் இளைஞர்கள் தயாராயுள்ளனரென்பதை நமதருந் தந்தையார் பெரியார் அவர்களுக்குச்சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், ஏனெனில் விடுதலையடைந்துள்ள எந்த நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும், முன்னேற்றப்படிகளில் அந்நாடு செல்ல முனைந்தபோது பழமைக்கும், நயவஞ்சகத்திற்கும், பிற்போக்குக்கும் பல இளைஞர்களுடைய, சுதந்தரவீரர்களுடைய இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது என்பது அங்கை நெல்லிபோல் விளங்குவதாகும். ஆகையினால் புரட்சியின்றி, இரத்தம் சிந்துதலின்றி [illegible] நாடு விடுதலை பெறுமெ[illegible] பேசுவது வீண் திண்ணை வே[illegible]ந்தமாகும்.

புதுக்கோட்டை, கீழ நிலைக் கோட்டை இசை வேளாள இளைஞர் சங்[illegible]

வைத்தியம்

தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி சொற்பொழிவு

19-2-44-ஆம் தேதி சிதம்பரத்தில் கூடிய சித்தவைத்திய மாநாட்டில், தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் 25-3-44-ஆம் தேதிய 'குடி அரசி'ன் தொடர்ச்சி:-

"அதாவது சித்தவைத்தியம் என்றால் நம் நாட்டு சித்தர்களால், நம் நாட்டு தட்பவெப்பங்களுக் கேற்றவாறு நம் நாட்டு மூலிகைகளால் உபயோகப் படுத்துமாறு நம் நாட்டுப் பாஷையால் அமைக்கப்பட்டதாகும். இது பெரும்பாலும் நம் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இது பெரும்பாலும் செய்யுள் நடையில் அமைக்கப் பெற்று சுளுவில் தெரிந்து கொள்ளக் கூடியதானாலும் சிற்சில விஷயங்கள் குரு மூலமாக தெரிய வேண்டியதாகவும் அமைந்திருக்கிறது. இதில் பலதரப் பட்டவைகளாக விருக்கிலும் நம் நாட்டில் கிடைக்கக்கூடிய பொருள்களை யெல்லாம் இந்த வைத்தியத்தில் மருந்துக்குதவும் பொருள்களாக அமைக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய பெருமை வாய்ந்ததும் சுளுவில் முடித்து நோய்களை அகற்றியும் நோய் வராமல் தடுப்பதும் நீண்ட ஆயுளோடு வாழக்கூடியதுமான முறைகளை அமைத்துச் செய்ததுமான நூல்கள் மற்றெந்த வைத்தியத்திலும் காண முடியாததுமானதாக அமைந்து கிடக்கிறது. இன்னும் இதன் அருமை பெருமைகளைப் பற்றி விரித்துரைப்பதென்றால் மிக விரியும் என்று அஞ்சுகிறேன்.

ஆகையால் நம் நாட்டு மக்களாகிய நாம், நம் நாட்டு வைத்தியமாகிய சித்த வைத்தியத்தையே போற்றி வளர்த்து வர வேண்டிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்வதற்கு முன் ஒரு விஷயத்தை மட்டில் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

அதாவது, நமது நாட்டு வைத்தியமானது இவ்வளவு அருமை பெருமை வாய்ந்ததாக விருக்கும் போது இது முற் ...க்கடையாமல் சீர்கெட்டிருப்பதற்குக் ...ணம் என்னவென்பதை நாம் ஆராய் ...ந்து ஒழு..வேண்டியது ஒன்றுண்டு. ...யாதெனில் நாம் வைத்தியத்துக்காக ...ல்களை ஆராயும் போது சிற்சில நூல்களில் வைத்தியத்துடன் வாதத்தையும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதால், நமது ...சாதாரர்கள் அதைக் கண்... யத்திலிறங்கவிடாமல், இவர்கள் நோய்களைக் கொள்ளை கொள்வதோடு இவர்கள் பொருள்களையும் வாழ்க்கைகளையும் முயற்சிகளையும் கொள்ளை கொண்டு இவர்களை வாதித்து விடுகிறது. இதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆகையால் நாம் அதிலிறங்காமல் நமதுயர்ந்த லட்சியமாகிற "ஜீவரத்னவாத"மாகிற இந்த மேலான வைத்திய முறையில் நமது முழுமனதோடு ஆராய்ந்தறிந்து மக்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்து அவர்கள் துன்பங்களைப் போக்க முற்படுவோமேயானால் நமது நாட்டுக் கலைகளையும், மக்களையும்...

ஜவுளி வியாபாரிகள் சங்கம்

வெள்ளி விழா கொண்டாட்டம்

குமாரராஜா சர் முத்தைய செட்டியார் சொற்பொழிவு

சென்னை அரமனைக்காரத் தெரு செயின்ட் மேரிஸ் ஹாலில் 11-6-44-ல் குமாரராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சென்னை ஜவுளி வியாபாரிகள் சங்கத்தின் வெள்ளி விழா கொண்டாட்டத்தில், குமாரராஜா அவர்கள், இச்சங்கம் 25 ஆண்டுகள் திறம்பட செய்து வந்த வேலைகளைப் பாராட்டிவிட்டு, நாட்டில் பல சங்கங்கள் இருப்பதால் அவற்றின் பலம் குறையுமென்றும், ஆகையால் எல்லாம் ஒரு பெரிய ஸ்தாபனத்திற்குள் ஐக்கியப்பட்டு வேலை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"அகில இந்திய ஜவுளி வியாபாரிகளின் பெடரேஷன் ஆரம்பிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஸ்தாபனம் யுத்த காலத்தில் மட்டுமின்றி சாதாரண காலத்திலுங்கூட பல் வேறு மாகாண ஸ்தாபனங்களுக்கும் பேருதவியாக இருக்குமென்று நம்புகிறேன்.

"யுத்தத்தின் தேவைகளினால் உங்கள் வியாபாரத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நான் இச்சமயத்தில் குறிப்பிடாமலிருக்க முடியாது. போரிடும் படைகளுக்கான தேவைகளில் மார்க்கட்டு தேவைகளை அது வெகுவாக குறைத்து விட்டது. அதனால் உங்கள் வியாபாரம் பெரிதும் குறைந்துவிட்டது. இது பெருங் கஷ்டம் தான். யுத்தத்தின் காரணமாக உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறது. அதுபோல நீங்களும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறீர்கள். இன்றைய யுத்தத்தில் வெற்றி ஏற்பட்டு சமாதானம் காணும் வரை இத்தகைய கஷ்டங்கள் இருந்து தான் தீரும்.

துணி உற்பத்தி

"உணவுக்கு அடுத்தபடியாக மனிதனுக்கு அவசியமானது உடை. இது யாவருக்கும் தெரிந்த விஷயம். பம்பாய், 15 வருஷத் திட்டப்படி சாதாரண காலத்தில் ஒருவருக்கு 16 கஜம் துணி தான் கிடைக்கக்கூடும். இது அவசியத் தேவைக்கு எவ்வளவு குறைந்தது என்பதை நான் எடுத்துக் காட்டத் தேவையில்லை. இதன் விளைவு மக்கள் போதிய உடையின்றி அரைகுறையாக உடை அணியும்படியே நேரும். இதை இரட்டிக்கும்படி செய்வதே நம்லட்சியமாக இருக்கவேண்டும். நீண்ட காலத் திட்டத்தில் துணி உற்பத்தித் தொழில் உருவாக்கப்பட்டால் இதற்கு சாத்தியமிருக்கிறது.

"இப்பொழுது மக்களின்தேவையை மட்டுமின்றி யுத்தத்திற்குப் பின் வியாபாரத் தேவையையும் கருதி ஜவுளி உற்பத்தித் தொழில் யுத்தத்திற்குப் பின்னும் இதே போல் இன்னும் அதிகமாக வேலை செய்யவேண்டும். ஜவுளி சாக்குகளுக்கு இந்தியாவுக்கு நிறைய மார்க்கட்டு இருக்கிறது. எத்தொழிலுக்கும் மார்க்கட்டுதான் அவசியம், அதற்கான சக்தி உங்கள் கையில் தான் இருக்கிறது.

"ஜவுளித் தொழிலுக்கு இம்மாகாணத்தில் கஷ்டமிருப்பதாக வரவேற்புக் கமிட்டித் தலைவர்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

விருதையில் பெரியார் பேருரை

மாணவருக்கு நல்லுரை

விருதுநகர், ஜூன் 11-இல் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட மாநாட்டைத் திறந்து வைத்த பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:

"தோழர்களே,

"திராவிடர்களாகிய நாம் பிறந்ததால், வளர்ந்ததால், வாழ்வதால், திராவிட நாடு என்று சொல்லிக்கொள்ளும் இந்த நமது நாடு இன்று பொருளாதார வாழ்வில், சமூக மேம்பாட்டில் சமூகக் கொள்கையில் அரசியல் ஆதிக்கத்தில், இது பிறருடைய-அந்நியருடைய நாடாக இருக்கிறது. எப்படி எனில் நம் உழைப்பையும், நம் நாட்டின் வளப்பத்தையும், அந்நியர்களே கொள்ளை கொண்டு அனுபவிக்கிறார்கள். நம் நிலை ஆப்பிரிக்கா நாட்டு சுதேசிகள் நிலையில் இருக்கிறது.

"இதை மாற்றுவதற்கு ஆகவே இப்படிப்பட்ட மாநாடுகளைக் கூட்டி மக்களுக்கு உணர்ச்சி ஊட்டி தொண்டாற்றச் செய்கிறோம். இம்மாநாடு தேர்தல்களுக்காக செய்யப்படும் பிரசார மாநாடல்ல. நம் இன்றைய நிலையை நாம் உணர்ந்து நம் கடமையைச் செய்யத் தூண்டும் மாநாடேயாகும்.

தேர்தலும், நாமும்

"தேர்தல் பற்றி என்னுடைய அபிப்பிராயம் உங்களுக்கெல்லாம் தெரியும். பலதடவையும் சொல்லியிருக்கிறேன், இன்று நம் லட்சியம் தேர்தலல்ல. ஆனால், தனிப்பட்டவர்கள் தம் சொந்த முறையில் தேர்தலில் நிற்பதையோ, வெற்றி பெறுவதையோ நான் வெறுக்கவில்லை; இன்று வேண்டாமென்றும் சொல்லவில்லை.

"இயக்கத்தின் பெயரால் இப்போது தேர்தலில் ஈடுபடக்கூடாது என்பதும் இயக்க வேலை தேர்தல் பிரசாரமென்றிருக்கக்கூடாது என்பதும் என் கருத்[illegible] தவிர இன்[illegible] என்னை சுயமரியாதை இயக்கத் தலைவரென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரென்றும் சொல்லுகிறீர்கள். நான் சொல்கிறபடி என் பேச்சைக் கேட்டு நடக்க பல முக்கியஸ்தர்களும் தொண்டர்களும் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் ஒரு சிறு பஞ்சாயத்து எலக்‌ஷனுக்கு நான் நின்றேனென்றாலும் நான் வெற்றிபெற மாட்டேன். இயக்கப் பிரமுகர்கள் பலர் நிலையும் இப்படித்தான். இதிலிருந்து பொது மக்களிடத்தில் நமக்குச் செல்வாக்கு இல்லை என்று அர்த்தமல்ல. இன்றைய தேர்தல் என்பது பாமர மக்களை ஏய்க்கும் ஒரு வித்தை. அதில் தேர்ச்சி பெற முதலில் முன் வர வேண்டும். அதற்கேற்ற துணிவும் தொண்டும் நமக்கு வேண்டும்.

பெருந்தோல்விக்குப் பின்

"1937-ஆம் ஆண்டில் ஜஸ்டிஸ் கட்சிக் கேற்பட்ட "படுதோல்வி"க்குப் பின்னர் தான் நம்மை நாம் உணர முடிந்தது. பாமர மக்களிடம் நேரிட சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றிற்று. ஆகவே, தோல்வியின் காரணமாக நாம் நம்மைத் திராவிடரென்று உணர்ந்திருக்கிறோம்; நம் மக்களிடையே ஒரு புது உணர்ச்சியை ஊட்டி நமது கொள்கைகளைப் பயமின்றி எல்லா இடங்களிலும் பிரசாரம் செய்து வருகிறோம் திருவாரூர் தீர்மானப்படியே.

"சேலத்தில் சென்ற ஆண்டில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஜஸ்டிஸ்கட்சி யெனப்படுவது திராவிடர் கட்சி என்ற பெயரால் வழங்கப்பட வேண்டுமென்றும் [illegible]ர்மானத்திலே பார்ப்பன[illegible]திருத்தப்பட வேண்டுமென்றும் சொன்னேன். அதை அநேகர் ஆதரித்தார்கள். வரப்போகும் மாகாண மாநாட்டில் இதுதான் முக்கியமான முதல் பிரச்சினையாக இருக்க முடியும்.

திராவிடர் என்ற மாறுதல் ஏன்?

"இப்பொழுது திராவிடர் என்ற மாறுதல் ஏன்? இது பலரும் கேட்கக்கூடிய நியாயமான கேள்வியாகும். அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த நாட்டு மக்களாகிய நமக்கு ஏராளமான குறைபாடுகள் இருப்பது கண் கூடு. அதை உத்தேசித்தே நமது பெரியார்கள் 27 ஆண்டுகளுக்குமுன்னர் நீதிக்கட்சியை தோற்றுவித்தார்கள். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது, இயக்கம் ஆரம்பிக்கப்பட்டநாளில் 'நீதிகட்சி' என்ற பெயர் இருக்கவில்லை. தெ. இ. ந. உ. சங்கம் எனப்படுவதுதான் அதன் பெயர். அந்தக் கட்சிக்காக ஏற்பட்ட ஆங்கிலப் பத்திரிகையின் பெயரே (Justice) 'ஜஸ்டிஸ்'. பத்திரிகையின் பெயரே கட்சிக்கு நிலைத்து விட்டது. கட்சியின் தமிழ்ப் பத்திரிகைக்குத் 'திராவிடன்' என்ற பெயரிருந்தும் நம் கட்சிக்கு திராவிடர் கட்சி என்ற பெயர் ஏற்படாமல் ஆங்கிலப் பத்திரிகையின் பெயராலே கட்சியின் பெயர் வழக்காற்றில் வந்துவிட்டதற்குக் காரணம் ஆங்கிலமறிந்தவர்களே அக்காலத்தில் நம் கட்சியில் செல்வாக்கும், ஆதிக்கமும் பெற்றிருந்தது தான். அந்தக் காலத்தில் இந்தக் கட்சி எந்த மக்களின் நல்வாழ்விற்காக ஏற்பட்டதோ, அந்த மக்களுக்குப் பெயரென்ன என்ற பிரச்சினை எழுந்தது. ஆனால் 'திராவிடர்' என்ற பெயருக்கு ஏகோபித்த ஆதரவு கிடைக்காத காரணத்தால் பெரிதும் ஆந்திரர் ஒப்புக்கொள்ளாததால் தென் இந்தியர் என்று ஏற்படுத்திக் கொண்டார்கள்.

"தென் இந்தியர், பார்ப்ப[illegible]லாதார் என்ற இவ்விரண்டும் [illegible]றுக்கொன்று முரண்பட்ட [illegible]துக்களைக் கொண்டுள்ளன. உத்[illegible]யோகங்களைப் பிரித்துக் கொடுப்[illegible]பதில் 'பார்ப்பனரல்லாதார்' [illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தே தவிர, இன உணர்ச்சி ஏற்பட வேண்டிய முறையில் ஒப்புக் கொள்ளப்படவில்லை. அந்தக் குறைபாடு நம் மனத்தில் பல நாட்களாகவே இருந்து வருகிறது. தென் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு லட்சியச் சொல் ஒன்றில்லாமலிருப்பது பெருங்கேடு. இந்தக் காரணத்தாலேயும், 'அல்லாதார்' என்ற பட்டம் நமக்குக் கூடாது என்பதாலேயும், நாமெல்லோரும் ஒரு கூட்டிற்குள் வர வேண்டுமென்பதாலேயும், ஒரு குறிச்சொல் தேவை; மிகமிகத் தேவை. இதைப் பல நாட்களாகவே நான் கூறி வருகிறேன்.

நம் மடமை மடியவேண்டாமா?

"நம்மை, 'யார்?', என்று கேட்டால், பார்ப்பனரல்லாதார் என்று சொல்கிறோம். மற்றபடி நம் நாடு ஏது?, என்று கேட்டால், நமது அருமை நாட்டின் பெயரை மறந்து, பெரிய நிலப்பரப்பின், நமக்குச் சம்மந்தமில்லாத நாட்டின் பெயரை (இந்தியா என்று) கூறுகிறோம்; அதன் காரணமாக 'இந்தியர்' என்றும் அழைக்கப்படுகிறோம். அரசாங்கத்தார் நம்மை மகமதியரல்லாதார் என்று அழைக்கிறார்கள். நம் தொகுதிக்கு அது தான் பெயர். மேல் நாடுகளாகிய ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, ஸ்பெயின், கிரீஸ், எகிப்து, துருக்கி ஆகிய எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் பெயரை வைத்துக் கொண்டு, அதைக் காப்பாற்றவேண்டி மற்றவர்களுடன் போராடியே வந்திருக்கிறது. ஜர்மானியன், ஜர்மனிக்குள் யூதன் ஏன் வாழ்ந்திருக்கவேண்டும்?, அவன் நமது நாட்டை ஏன் சுரண்டவேண்டும்? வெளி நாட்டாருக்கு இங்கு என்ன வேலை? வெளியான் ஏன் நம்மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும்? என்ற உணர்ச்சிகளால் உந்தப்பட்டு போராடி வந்ததன் காரணமாக, இன்று ஜர்மனி உலகில் பெரியதோர் வல்லரசாகவும், மற்ற நாடுகள் கண்டஞ்சும் படியாகவும் இருக்கிறது. 'நாமேன் அப்படி ஆகக்கூடாது', என்பதைத் திராவிட மாணவ[illegible] நீங்கள் யோசிக்க வேண்[illegible]

திராவிடர் இந்துக்களல்லர்

"இனத்தைக் குறிப்பாக வைத்துக்கொண்டு ஒற்றுமைபெற வழியில்லாதவர்கள், சமயத்தைச் சொல்லி அதன் மூலம் ஒற்றுமைப்படுகின்றார்கள். முஸ்லிம்கள் தங்கள் இனம் இன்னது என்று சொல்லாவிட்டாலும், தங்களுக்குள்ளே பல இனங்கள் இருப்பதன் காரணமாக, 'இஸ்லாம்' என்ற ஒரு சமயத்தின் மூலம் ஒன்றுபட்டிருக்கின்றனர். உலகத்திலுள்ள பல்வேறு மக்கட் கூட்டத்தினரின் நிலை நாளுக்குநாள் முன்னேற்றமும், ஒற்றுமையும் ஏற்படுவதாக அமைந்திருக்க, இந்த நாட்டு மக்களாகிய நாம் நம்மைப் பார்ப்பனரல்லாதார் என்ற பொருளுள்ள வார்த்தையால் அழைத்துக் கொண்டு இருப்பதால், நம்முடைய இன உணர்ச்சியும், ஒற்றுமை உணர்ச்சியும் எப்படி ஏற்பட முடியும்? நம் சமயம் இந்துவென்றும், நாடு இந்தியா என்றும், இனம் இந்தியர் என்றும் கூறி வருகிறோம்; இதைத் தப்பு என்று மட்டும் நான் கூறவில்லை. வெறுங் கற்பனையுங்கூட. 'இந்து' என்று சொல்வதால் நாம் இவ்வளவு பெரிய இனம் பல சிறு சிறு வகுப்புகளாகப் பிரிந்து ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டிருக்கத்தான் முடிகின்றதே தவிர, அவ்வார்த்தையில் வேறென்ன தத்துவார்த்தம் இருக்க முடியும்? 500 அல்லது 600 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட எந்த நூலிலாவது இந்த நாட்டுப் பெருங்குடி மக்களை 'இந்து' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா?" என்று பண்டிதர்களையே நான் கேட்கிறேன்.

இந்தியாவின் சீர்கேடு

"உலக சமுதாயத்தைப் பொதுவாக எடுத்துக் கொண்டால், இவ் இந்திய நாட்டைப் போன்ற நாடு இருந்ததில்லை. இருக்கவுமில்லை. கையிலே வலுத்தவன் மற்றவர்களைச் சுரண்டிப் பிழைக்கவும், உண்ண ஒரு கூட்டமும், உழைக்க மற்றவர்களும் இருக்கும்படியானதுமான சீர்கேடான நிலை ஏற்படத்தான் இப்பெரிய விஸ்தீரணமும் இந்தியா என்கிற பெயரும் [illegible]

இன்றுபடும்படியான அறிகுறிகள் ஏதும் தோன்றவேயில்லை. இவ்வாறு பல்வேறு இனங்கள் 400, 500 மொழிகள் 1000, 2000 வகுப்புகள், பலபல கொள்கைகள் பழக்க வழக்கங்கள் கொண்ட ஒரு பெரும் நிலப்பரப்பை ஒரு நாடு (நேஷன்) என்று சொல்வதால் பயனென்ன? என்று யோசிக்க இந்த நாட்டு 'மேதாவி'களுக்கு அவகாசமில்லை. 4 கோடி, 2 கோடி, 50 லட்சம், 20 லட்சம் என்பன போன்ற எண்ணிக்கையுள்ள மக்களைக் கொண்ட தனிச் சிறு நாடுகள் நமது ஒரு ஜில்லா 2 ஜில்லா போன்றவைகள் சுதந்திர நாடுகளாக ஐரோப்பாவிலே இருக்கின்றன. அம்மாதிரி சிறு நாடுகள் சுதந்திர நாடுகளாக இருக்க முடிவது ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை முக்கியமாகக் கருதியதால் தான். அந்தப்படி இந்தியா கண்டத்தில் வாழ்ந்து வரும் தனி இனத்தவராகிய நாம், பிறருடைய சம்பந்தத்தை விட்டு நமக்குரிய இலட்சியத்தை விடாப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு முன்னேற்றமடைய முயற்சி செய்ய வேண்டும். அதற்காகத்தான் இதை திராவிடர் மாநாடு என்கிறோம்.

மாணவர் மாநாடு—அவசியம்

'இறுதியாக, தோழர்களே! மாணவர் மாநாடு அதற்கு இந்த மாநாட்டை மாணவர் மாநாடு என்று ஏன் கூறவேண்டும்? நாங்கள், அதாவது மாணவரல்லாதார் செய்த காரியம் போதும். ஒவ்வொரு பெரியவருக்கும் ஒவ்வொரு ஜோலி வந்துவிட்டது. எக்காலத்திலும், இலாப நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல், கிளர்ச்சியில் தீவிரமாக இறங்கித் துணிந்து தொண்டாற்ற ஒரு கூட்டம்வேண்டும். முன்னாட்களில் தொண்டர் கூட்டத்திலிருந்தவர்கள் இன்று பெரியவர்களாகி விட்டார்கள். லாபநஷ்டம் பார்க்கவேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள். இது இயற்கை. செடிகள் மரங்களாகி விட்டன. செடிகளை நம்பித்தான் நான் இயக்கப் பணியாற்றி வந்திருக்கிறேன், மாணவர்களைப் பற்றி [illegible] கொள்ளுவ[illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நீலகிரி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் மாநாடு

நீலகிரி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் மாநாடு 18-6-44 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் மாலை 2-30 மணி வரையில் குன்னூர் ஸ்ரீ கணேஷ் டாக்கீஸில் நடைபெறும்.

அதுசமயம் ராவ்பகதூர் என். சிவராஜ் B. A., B. L., M. L. A.,(Central) தலைமை வகிப்பார்.

தோழர் ஆர். நஞ்சையா அவர்கள் விழாவைத் தொடக்கிவைப்பார்.

ராவ்சாகிப் எல். சி. குருசாமி Ex. M. L. C. அவர்கள் தாழ்த்தப்பட்டோர் எதிர்காலத் திட்டம் என்பதைப் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

சேலம் அம்மாப்பேட்டை ஜஸ்டிஸ் தமிழர் சங்கம்

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் 17-6-44 ஆம் தேதி மாலை 7 மணிக்கு சங்கத் தலைவர் தோழர் எ. முருகேச முதலியார் வீட்டில் கூடும்.

அதுசமயம், ஷை சங்கம் பூட்டப்பட்டதையும், அது விஷயமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதுபற்றி யோசிக்கப்படும். ஆதலால் எல்லா அங்கத்தினர்களும் அவசியம் கூட்டத்திற்கு வந்து அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதையே அழைப்பாகக் கொண்டு வரவேண்டியது.

வை. பெருமாள் முதலி,
உபகாரியதரிசி.

'திருநெல்வேலி ஜில்லா திராவிட ஆசிரியர் கழகம்'

திருநெல்வேலி, ஜூன். 12—

11-6-44 ஞாயிறு இரவு 8 மணிக்கு, திருநெல்வேலி வடக்கு ரத வீதி குமார விலாஸ் உணவு விடுதி மேடையில் பல பள்ளிக்கூடங்களிலுள்ள திராவிட ஆசிரியர்கள் கூட்டம் தோழர் பி. இராமகிருஷ்ணன் பி. ஏ., எல். டி., தலைமையில் நடைபெற்றது.

திராவிட ஆசிரியர் கழகம் நிறுவ வேண்டிய அவசியத்தைப் பற்றி பல தோழர்கள் விரிவாகப் பேசினார்கள். பின்பு கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாணவர்கள், இளைஞர்கள் நம்முடைய இயக்கத்திற் பற்றுதல் கொள்ள வேண்டியதும், மாநாடுகள் நடத்தவேண்டிய ... [illegible]

இரண்டாம் போர் முனை தொடங்கி விட்டது

★

டல மைல்களுக்கப்பால் அது நடைபெறுகிறது

என்றாலும்

சென்னையிலுள்ள நாம்

★

மே. த. கவர்னர் யுத்தநிதிக்குத்

தாராளமாய்ப்

பணம் கொடுத்து அதற்கு உதவலாம்.

தென்னாற்காடு மாவட்ட திராவிடர் மாநாடு

கூடலூர், ஜூன் 13-

11-6-44 ஞாயிறு பகல் 11 மணிக்கு கூடலூர் பழையபட்டினம் நூல் நிலையத்தில் நடந்த திராவிட கழகக் கூட்டத்தில் தென்னாற்காடு மாவட்ட திராவிடர் மாநாடு ஒன்று வரும் ஜூலைமுதல் வாரத்தில் நடத்துவதென்றும் அவ்வமயம் பெரியார், ஊ. பு. அ. சவுந்தரபாண்டியன், சி. என். அண்ணாதுரை, நெடுஞ்செழியன், அன்பழகன் ஆகியோரை வரவழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது: தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள இயக்க அன்பர்கள் யாவரும் கூடலூர் ... அவர்க... எழுதி [illegible]

ஈரோடு மருத்துவகுல சங்க முதலாவது ஆண்டு விழா

20-6-44 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஈரோடு பழைய ரயில்வே ஸ்டேஷனில், வெங்கட்ட நாயக்கர் சத்திரத்தில் ஷை ஆண்டு விழா திருநெல்வேலி தோழர் T. G. சங்கர் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

மாலை 7 மணிக்கு வெங்கட்ட நாயக்கர் சத்திரத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

சர் ஆர். கே. எஸ். 10,000 ரூபாய்

"தஸ்தாரிபாய் நிதிக்கு சர் ஆர். கே. ... செட்டியார் அவர்கள் 10000 [illegible]

குடி அரசு

1944-ளு ஜூன்-மீ 17-உ

ஆந்திராவில் சுயமரியாதை இயக்கம்

பெரியார் ஈ. வெ. ராவும் தோழர்கள் அண்ணாதுரை, கஜேந்திரன், ஜனார்த்தனம், பணியம்மை ஆகியோரும் ஆந்திரநாடு சென்று வந்த குறிப்பு சென்ற வார இதழில் வாசகர்கள் கண்டிருக்கலாம்.

தமிழ் நாட்டில் தோன்றிய சுயமரியாதை இயக்கம் ஆந்திர நாட்டிலும், மலையாள நாட்டிலும் எவ்விதம் பணி ஆற்றி வருகின்றது என்பது தமிழர் தெரிவதற்கு வசதியே இல்லாமல் போய்விட்டது.

மலையாள நாட்டில் மலையாள நாட்டுப் பெருங்குடி மக்களாகிய ஈழவ சமுதாயத்திலுள்ள மக்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு முன்பதாகவே உணர்ச்சி தோன்ற பெரியார் நாராயணகுருசுவாமி அவர்கள் செய்த பெருந்தொண்டால் ஒரு பெரிய விழிப்பு உண்டாக்கப்பட்டுவந்தது. ஆனால் அவ்விழிப்பு மதம், கடவுள் என்பவைகளைக் கட்டிப் புரண்டு கொண்டிருக்கும்படியானதாக இருந்துகொண்டு ஜாதி முறையை மாத்திரம் கண்டிக்கக்கூடியதாய் இருந்ததால் குறிப்பிடத் தகுந்த மாறுதல் ஒன்றும் அக்காலத்தில் அதிகமாக ஏற்படுவதற்கில்லாமல் போயிற்று.

வைக்கம் "சத்தியாக்கிரகம்" காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சியில் பெரியார் ஈ. வெ. ரா. பிரசாரம் செய்ய ஏற்பட்டதின் பயனாய் ஈழவ சமுதாய இளைஞர்களுக்கு மதம், கடவுள், புராணம், சாஸ்திரம் ஆகியவற்றைப்பற்றிய குருட் [illegible] தல் ஒழிந்ததோடு மா [illegible] புரட்சி நடக்கும்படியான அளவுக்கு உணர்ச்சிகள் தோன்றலாயின.

அதன் பயனாகவே மதமாற்ற மாநாடு, மதமொழிப்பு மாநாடு, நாஸ்திக மாநாடு ஆகியவைகள் மலையாளத்தில் நடக்கவும் மாநாடுகளுக்கு 10000, 20000 பேர்கள் கூடவும் பலர் மதம் மாறவும், அதன் பயனாய் கொலை, கொள்ளை முதலியன நடக்கவும் அரசாங்கம் பயமடையவும் ஏற்பட்டது மாத்திரமல்லாமல், கடைசியாக "திருவாங்கூர் ராஜ்யத்தில் உள்ள கோயில்கள், குளங்கள், சத்திரங்கள், சாவடிகள், ரோட்டுகள், சந்து தடங்கள் முதலிய எல்லா பொது இடங்களிலும் ஜாதி பாகுபாடு இல்லாமல் "பறையர்கள்" "புலையர்கள்" "சக்கிலிகள்" என்பவர்கள் உள்பட எல்லா ஜாதியாரும் எவ்வித தடையுமில்லாமல் செல்லலாம்" என்பதாக திருவாங்கூர் அரசாங்கத்தார் உத்திரவு போட்டு பட்டாளத்தை வைத்து அமுலில் நடத்திக்கொடுத்தார்கள்.

இதில் ஒரு அதிசயமென்னவென்றால் காந்தியார் முதல் எல்லா வருணாச்சிரம "வைதிக" பார்ப்பனர்களும் மகாராஜாவுக்கு வாழ்த்தனுப்பினார்கள் என்பதோடு சிலையும் வைத்தார்கள். அப்படிப்பட்ட மலையாளம் இன்று தமிழ்நாட்டுடன் தொடர்ந்த தொடர்பு இல்லாததால் இப்படிப்பட்ட உணர்ச்சி உள்ள வாலிபர்களைப் பொதுவுடைமை என்னும் பேரால் காங்கிரசுக்காரர்கள் ஏமாற்றி வேறு துறையில் அவர்களது கவனத்தை திருப்பிவிட்டார்கள்.

அதுபோலவே தமிழ் நாட்டில் தோன்றிய சுயமரியாதை இயக்கம் ஆந்திர நாட்டிலும் வேலை செய்யாமல் இருக்கவில்லை. ஆந்திர நாட்டில் 1930-ம் ஆண்டுக்கு முன்பிருந்தே பார்ப்பனர் புரோகிதமொழிந்த திருமணம் ஏராளமாக நடந்து வந்திருக்கின்றன. 1930ம் ஆண்டுக்கு முன்பிருந்தே அங்கு இராமாயணம், பாரதம், பகவத்கீதை ஆகியமதப் [illegible]

தோழர் இராமசாமி சௌத்திரி என்ற பெரியார் நல்ல ஆங்கிலம் கற்றவர்; மேல்நாடு சென்றுவந்தவர்; பாரிஸ்டர்; இவர் இராமாயணம், பாரதம் ஆகியவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து மறுத்தும், கண்டித்தும் பல புத்தகங்கள் எழுதி இருக்கிறார்.

இரணியனைப் பற்றி புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள் எழுதி இருப்பதுபோலவே எழுதி இருக்கிறார்.

கீதையை அடியோடு பொய் யென்றும் வருணாச்சிரமத்தை நிலைநாட்டச் செய்த ஒரு சூழ்ச்சிக் கதை என்றும் விளக்கி இருக்கிறார்.

இராமாயணத்தைக் கண்டித்து சம்பூகனை இராமன் கொன்றான் என்பதைப் பற்றி ஒரு நாடகமும் எழுதி இருக்கிறார். அதுபோலவே பாரதத்தையும் கண்டித்து பஞ்சபாண்டவர் துரோபதை ஆகியவர்கள் நடத்தை குற்றமானது என்றும் துரியோதனாதிகள் நடத்தை நேரானதென்றும் ஆராய்ச்சிக்குறிப்புகள் எழுதியிருக்கிறார். இப்படி இன்னமும் பல புரட்சிகரமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். இவர் பெயரால் இன்று பல ஸ்தாபனங்களும், இவருக்கு பல பின்பற்றுவோர்களும், இவரிடத்தில் மதிப்பு வைத்து இருக்கும் பல பெரியார்களும் இன்று ஆந்திர நாட்டில் மலிந்திருக்கின்றார்கள்.

இவை மாத்திரமல்லாமல் ஆந்திராவில் படித்த தெலுங்கு பண்டிதர்களும், கவிவாணர்களும், பள்ளிக்கூட பண்டிதர்களும் தமிழ்நாட்டுப் பண்டிதர்கள் அநேகரைப் போல் மூடப் பண்டிதர்களாகவும், முட்டாள் பண்டிதர்களாகவும், ஆரிய அடிமைப் பிழைப்புக்காரர்களாகவும் இல்லாமல் நல்ல பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும், புரட்சித் தன்மையும் கொண்டவர்களாகவே காணப்படுகிறார்கள். புத்தகப் பதிப்பாளர்களும், ஆசிரியர்களும், நல்ல எழுத்தாளர்களும் புராண ஆபாசங்களையும் இந்து [illegible]

...நாட்டாரைப் போல் வெறும் ...விற்றுப் பிழைப்புக் கூலிகளாய் ...இல்லாமல் பெரிதும் சீர்திருத்த ...திகளாய்ப் புரட்சி உணர்ச்சிக் ...ர்களாய் இருக்கிறார்கள்.

...உதாரணமாக பெரியார் தலைமையில் பேசிய பண்டிதர் ...ள் நான்கு பேர் என்றால் ...வர்கள் நால்வரும் உயர் ...ப் பள்ளி தெலுங்கு பண்டி...களாகவும் அர்சால் வரும் ...தெலுங்கர்கள், திராவிடர்கள் ...ன்றும் ஆந்திரம் என் ...த தப்பு என்றும், சுத்த ...ன தெலுங்கை வடமொழி வந்து ...கெடுத்துவிட்டதென்றும், வட...மொழியின் மூலமாக இருக்கும் ...ந்தக் கதையும், புராணமும், நீதி...ம், இதிகாசமும் தெலுங்கருக்கு ...ம்மந்தப்பட்டதல்லவென்றும் ...தாரங்களோடு 2000 பேர்கள் ...ன்னிலையில் பந்தயம் கூறிப் ...பேசினார்கள். அவர்களில் சில...டைய ஆந்திர மொழிகள் நம் ...ட்டு எப்பேர்பட்ட மூட்டாள் ...ண்டிதர்களையும் விழிக்கச் செய் ...ம் என்றே சொல்லலாம். வாலி...களின் உணர்ச்சியைப் பற்றி ...ப்பிடவே அளவு இடையா...ன்று சொல்லலாம்.

அப்படிப்பட்ட உணர்ச்சியும் ...ன்மையும் தமிழ்நாட்டிற்கு ...நாவது ஆந்திராவிலிருந்து ...0 மைல் தூரத்தில் இருக் ...ம் தமிழ்நாட்டிற்கு தெரி...த்கில்லாமல் இருப்பதற்குக் ...ரணம் தொடர்பு இல்லாமல் ...ருப்பதும், மொழி வேறுவேறாக ...ருப்பதும், பத்திரிகைகள் போக்...வரத்து நடந்துகொள்ளாமல் விஷ...தனமாய் நடந்து கொள்ளு...தமல்லாமல் வேறு ஒன்றும் ...ல்லை.

...சுயமரியாதை இயக்கத்தில் இவ்...வளவு தீவிரமாக இருக்கும் ஆந்...நாட்டு மக்களின் பெரும்பகுதி...ர் ஜஸ்டிஸ் கட்சி என்றால் ...றுப்பைக் காட்டுகிறார்கள். ...ணைப் என்னவெனில், ஆந்...தெலுங்கர்களுக்குள் உள்ஜாதி, ...ரவது கம்மா, காப்பு, பலிஜ, ...நாயுடு, செட்டி ராஜா முதலிய

மேல் ஏற்பட்ட துவேஷங்களும் தான் காரணம் என்று சொன்னால் சிறிதும் தவறு இருக்க முடியாது.

இதன் மத்தியில் ஆந்திரர்களுக்குள் தமிழர்கள் என்றால் ஒருவித வெறுப்பு வளர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் ஆந்திர நாட்டை தமிழர்கள் சுரண்டுகிறார்கள் என்பதும் உத்தியோகங்கள் தமிழர்களே அனுபவிக்கிறார்கள் என்பதும் முக்கிய காரணமாகத் தெரிகின்றது.

இவை எல்லாம் ஆந்திரப் பார்ப்பனர்களும் சில பார்ப்பன அடிமைகளும் செய்து வரும் பிரசாரமும் நமக்குத் தெலுங்கில் பத்திரிகை இல்லாததும் தான் என்று சொல்ல வேண்டும். ஆனாலும் திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றி விளக்கிச் சொன்னால் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பொதுவாக இந்த ஆந்திர நாட்டில் காங்கரசுக்கோ, இந்து மகாசபைக்கோ அவ்வளவு செல்வாக்கு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இதை அறிந்தே ஆரிய சமாஜிகளும், பொது உடமைக்காரரும் பிரசாரம் செய்து மக்களை இந்து மதத்துக்கு விரோதமாகவும், காங்கரசுக்கு விரோதமாகவும் போகாமல் காப்பாற்றி வருகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரத்திற்கு அங்கு உள்நாட்டுத் தலைவர்கள் பிரமுகர்கள் எவரும் முயற்சித்ததாய் காண முடியவில்லை என்றாலும் சுயமரியாதைப் பிரசாரம் நம் நாட்டுத் தொடர்போடு ஒரு தெலுங்கு வாரப் பத்திரிகையையும் வைத்துக்கொண்டு நடத்தினால் நல்ல பலன் ஏற்படும் என்றே கருதுகிறோம்.

பெரியார் ஈ. வெ. ரா.

18-6-44-ல் திருச்சியில் நடைபெறும் தோழர் ரத்தினம்-வேலம்மாள் திருமணத்திற்கு தலைமை

திருச்சி மாவட்ட சுயமரியாதைமாநாடு

16—7—44, ஞாயிறு

தலைவர்:
புரட்சிக்கவி பாரதிதாசன்
திறப்பாளர்:
பெரியார் ஈ. வெ. ராமசாமிஅவர்கள்
கொடியேற்றுபவர்:
தளபதி C.N. அண்ணாதுரை M. A.
Dr. மதாம் படத்
திறப்பாளர்:
க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்)
நாகம்மையார் படத்
திறப்பாளர்:
திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம்
சர். ஏ. டி. பி படத்
திறப்பாளர்:
விருதை ஆசைத்தம்பி
சுந்தரனாடார் படத்
திறப்பாளர்:
ஏ. கே. பாச்சா
மற்றும் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

ஆர். சுலைமான்,
எஸ். ஜெகநாதன்,
தி சு. நாராயணசாமி,
செயலாளர்கள்.

நாகப்பட்டணம் சுயமரியாதை சங்க 13-வது ஆண்டு விழா

நாளது 20-6-44 செவ்வாய்க்கிழமை காலை 10½ மணிக்கு நாகை திராவிடர் கழகக் கட்டிடமாடியில் சீடாமங்கலம் தோழர் எ. ஆறுமுகம் அவர்கள் தலைமையின் கீழ் டை ஆண்டு விழா நடைபெறும்.

கொடியேற்று விழா: சிதம்பரம் தோழர் சம்மந்தம்.

உலகப் புரட்சி வீரன் லெனின் படத் திறப்பாளர்: நாகை திராவிடர் கழகத் தலைவர் தோழர் ஆர். வீ. கோபால்.

பெரியார் படத் திறப்பாளர்: தோழர் நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்).

பன்னீர் செல்வம் படத் திறப்பாளர்: நாகை தோழர் டி. கே. விஜயராகவலு பி. ஏ., பி. எல்.

நாகை நாயகம் சமது தலைவர் வெ. ப. பக்கிரிசாமி படத் திறப்பாளர்: நாகை ...பி. ஆறுமுகம்.

ரோஜா முத்தையா

இராமநாதபுரம் இராவிட மாணவர் மாநாடு

விருதையில் வீரர்களின் வீரமுழக்கம்

(கஜேந்திரன் தொகுத்தெழுதுவது)

விருதுநகர், ஜூன். 12-

இராமநாதபுர மாவட்ட முதலாவது திராவிட மாணவர் மாநாடு மாதர் சங்கக் கட்டிடத்தில் நேற்று முற்பகல் 10-30 மணிக்குத் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பிக்கப்பெற்றது. மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் கல்லூரி மாணவர்களும், உயர் நிலைப் பள்ளி மாணவர்களும், மாணவிகளும், மற்றும் திராவிட இளைஞர்களும் நூற்றுக் கணக்கில் உணர்ச்சியுடன் கூடியிருந்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் தோழர் க. அ. மதிஅழகன் தாராசுக் கொடியை ஏற்றி வைத்தும், தோழர் ஆ. வ. ப. ஆசைத்தம்பி எல்லோரையும் வரவேற்றும் சொற்பொழிவாற்றினார்கள். நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்திருந்து மாநாட்டைத் திறந்து வைக்கு முகத்தான் திராவிடர் தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

பெரியார் அவர்களின் திறப்புவிழா உரை 12.5 மணிக்கு முடிவு பெற்றதும், மாநாட்டுச் செயலாளர் தோழர் தெ. சி. க. சோமசுந்தரம் மாநாட்டிற்கு விருதுநகர் நகரசபைத் தலைவர் தோழர் வே. வ. இராமசாமி அவர்கள் தலைமை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்த வேண்டுகோளை மதுரை எ. வேணுகோபால், இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஹானர்ஸ்), சா. கஜேந்திரன் பி. ஏ., அருப்புக்கோட்டை சொக்கலிங்க பாண்டியன் ஆகிய தோழர்கள் ஆமோதிக்க, இராவ்பகதூர் வே. வ. இராமசாமி அவர்கள் உணர்ச்சி கொண்ட தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்.

"நான் பலவாண்டுகளாக பொதுத் தொண்டில், சுயமரியாதை இயக்கப்பணியில் ஈடுபட்டு வருகிறேன். பொதுஜன அபிப்பிராயத்தையே ஆண்டவனென்று கருதுகிறவன் நான்.

"திருவாரூரில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானித்தபடி நாலும் என் உறவினரும் மக்கள் தொகை கணக்கெடுக்கப் பட்டபொழுது, எங்களைத் 'திராவிடர்' என்றே கூறிக்கொண்டோம். பெரியார் தந்நலமற்று மக்கட்பணி புரிந்து வருவதன் பயனாக, நம்மை நாம் திராவிடரென்று அறிந்தனோம். இந்த ...

கள் விடுதலைக்கு உழைக்க வேண்டும்'', என்று தமது தலைமையுரையில் தலைவர் குறிப்பிட்டார்.

அதன் பின், திராவிடநாட்டுப் படத் திறப்பு ஆற்று முகத்தான் திருச்சி வழக்கறிஞர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் சொற்பெருக்காற்றுகையில், திராவிட மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டுமென்றும், பெரியாரைப் பேண வேண்டுமென்றும், காந்தீயம் மாண்டொழிந்துவிட்டதென்றும், எதிர்கால உலகு பெரியாரிசத்தையும், ரசிசத்தையும் அடிப்படையாகக் கொண்டு தான் சமைக்கப்படுமென்றும், திராவிட மாணவர்கள் உறுதியான உடல் கட்டு உடையவர்களாக இருக்க வேண்டி, மாமிச உணவை மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அத்துடன் முற்பகல் நிகழ்ச்சி முடிவு பெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட வெளியூர் முக்கியஸ்தர்களுக்கு தோழர் எம். எஸ். பி. எஸ். பரமசிவம் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது.

பிற்பகல்

மீண்டும் மாநாடு பிற்பகல் மூன்று மணிக்குத் தொடங்கப்பெற்றது. பெரியார் ஈ. வெ. ரா. படத்தைத் தோழர் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) அவர்களும், சர் பன்னீர் செல்வம் படத்தைத் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களும் திறந்து வைத்தார்கள்.

'தமிழ்இளைஞரும் தமிழ்நாடும்', 'திராவிடநாட்டுப் பிரிவினையில் மாணவர்கள்', 'எதிர்கால திட்டம்' என்பனபற்றி முறையே மு. இராமலிங்கம், பு. ஜனார்த்தன் பி. ஏ., அ. பொன்னம்பலம் ஆகிய தோழர்கள் பேசினார்கள். தோழர் இராமலிங்கம் தமிழ் ராஜ்யக் கட்சியைத் தோற்றுவித்து அதன் மூலம் ஆரிய ஆதிக்கத்திற்கு மறைமுகமாக உதவி புரிந்து வரும் தோழர் சி. பா. ஆதித்தனைக் கண்டித்தார். தோழர் சி. என். அண்ணாதுரை, தோழர் இராமலிங்கம் திராவிடர் இயக்கத்தைப் பற்றிக் கொண்டிருந்த சில தப்பபிப்பிராயங்களை எடுத்துக் காட்டி விளக்கித் திருத்தினார்.

வதற்கான முயற்சிகளை வரும் நீதிக் கட்சியின் மாகாண மாநாடு எடுத்துக் கொள்ளவேண்டும், உணவு விடுதிகளில் சாதிபேதத்தைக் குறிக்கும் 'போர்டு'களை நீக்க திராவிட நாட்டு நகராண்மைக் கழகத் தலைவர்கள் முயற்சி எடுத்துக் கொளல் அவசியம், எல்லா ஊர்களிலும் 'திராவிடர் தொண்டர் படை' ஏற்படுத்தப்படவேண்டும், திராவிட நடிகர் கழகங்கள் நாடெங்கும் தோன்ற வேண்டும், இணைக்கப்பட்ட தென்னாட்டு இருபெரும் இருப்புப் பாதைகளுக்குத் 'தி கிரேட் டிரவிடியன் ரயில்வே' என்ற பெயரை அரசாங்கத்தார் இடவேண்டும், பாட புத்தகங்கள் திருத்தி எழுதப்படவேண்டும், என்பதாக ஆறு தீர்மானங்கள், எஸ். இரத்தினம், ஆ. வ. ப. ஆசைத்தம்பி, டி. சி. கே. இராசமாணிக்கம், என். இராமசாமி, எம். கே. டி. சுப்பிரமணியன், தெ. சி. க. ராசேந்திரன், எஸ். சிவசாமி, பெரியார் ஆகிய தோழர்களால் விளக்கப்பட்டு, மாநாட்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பெற்றன.

தலைவர் முடிவுரையுடன் மாநாடு மாலை 7 மணிக்கு இனிது கலைந்தது.

பொதுக் கூட்டம்

பகல் வேளையில் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டையொட்டி செல்வம் பொட்டலில் இரவு 9-45 மணிக்குத் திராவிடர் பொதுக் கூட்டம் 'திராவிடநாடு' ஆசிரியர் தோழர் சி. என். அண்ணாதுரை தலைமையில், தொடங்கப் பெற்றது. தலைவர் சொற்பொழிவு முடிந்ததும், பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஒன்றரை மணிநேரம் சொற்பொழிவாற்றினார்கள். அங்குக் குழுமியிருந்த 5000 மக்கள் இடையிடையே கையொலியும், பேரொலியும் செய்தவண்ணமிருந்தனர். நன்றி கூறலுடன் பொதுக் கூட்டம் 12-15 மணிக்குமுடிவுற்றது.

தோழர்கள் பார்வதிதேவி-நடராஜன்

தோழர்கள் பார்வதிதேவி-நடராஜன் பர்மாவைச் சேர்ந்த இரங்கூன் நகரத்தில், சுகமாக இருப்பதாக சிம்லாவிலிருந்து செஞ்சிலுவை கமிஷனர் 7/6, 8/6, தந்தி-கடித மூலம் எங்கட்கு அறிவித்திருக்கிறார். பர்மாவிலிருந்து சேமச் செய்திவர ஆரம்பித்து விட்டது. இது தான் முதல் முறையாக வந்த செய்தி. (Red Cross Commissioner, Simla) செஞ்சிலுவைக் கூட்டத்தாரின் சேவையால் இனி பர்மாவில் வசிக்கும் நமதன் ...

தாராவியில் பார்ப்பனீயம் தலைகாட்டுகிறது

(தாராவி D. T. C. துரை)

எத்தனையோ வருடங்களாக எத்தனையோ பேதாபேதங்களிருந்தும், எதிரிக்கிடங்கொடாமலிருந்து வந்த தாராவி ஆதிதிராவிட சமூகத்திடையே, இப்பொழுது பார்ப்பனீயம் நுழைவதைக்கண்டு விசனிக்கிறேன். நம்மினத்தையே, பாழ்ப்படுத்தி, நசுக்கி, ஒடுக்கி, நாடு சிரிக்க ஆக்கி வைத்தது நயவஞ்சகப் பார்ப்பனீயம் என்பதை ஏன் மறந்து விட்டீர்கள்? நீடாமங்கலத்தில் மொட்டையடித்தது நினைவில்லையா? எத்தனையோ விதமான பசப்பு வார்த்தைகள் பேசி ஒட்டுப்பெற்று நமக்கே குழி தோண்டவில்லையா? தங்கம் தந்தாலுமதில் பங்கம் தானே வரும்?

முதியோர் கல்வித் திட்டம் அரசாங்கத்தாரால் நமது தோழர் ஒருவரைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறதே! அதில் சிரத்தையுடன் உரிமையும் உறவும் கொண்டாடி பயிலலாமே! இன்னும் ஆங்கில அறிவு தேவையானால் சர்க்காரே செய்துதரத் தயாராயிருக்கும் பொழுது, இந்த விஷப்பூச்சிகளின் தாகு நமக்கெதற்கு? சத்திரத்தில் சாப்பிட ஐயங்கார் ஏன் சிபார்சு? நாம் செய்ய முடியாதா இந்த வேலையை? நமது நிலையை யுணர்ந்து இன்னும் ஏமாந்து போகாமல், நம் காரியத்தை நாமே செய்ய சிரத்தை கொள்ளும்படி வேண்டுகிறேன். தூண்டில் போடுகிறது பார்ப்பனீயம்! துணை நில்லாதே தோழா! கண்ணிவைக்கிறது பார்ப்பனீயம்! கலந்து கொள்ளாதே தோழா!

நாகையில் பொதுக் கூட்டம்

20-6-44 மாலை 6-30 மணிக்கு நாகை அவுரித்திடல் மைதானத்தில் தோழர்கள் ரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), ஆரூர் கருணாநிதி 'முரசொலி' ஆசிரியர், வேலூர் சி. பி. சின்னராசு, சிதம்பரம் சம்மந்தம் முதலியோர்கள் பேசுவார்கள்.

திருமணம்

சேலம் திராவிடர் கழகக் கமிட்டி அங்கத்தினர் தோழர் கே. பி. சித்தய்யனுக்கும் கௌஜலட்சுமிக்கும் 28-5-44-ல் திருமணம் நடந்த போது, மணமக்களை பாராட்டும் முறையிலும் பத்திரிக்கை பரப்ப புது முறையாகவும் ஷை திருமணத்தின் ஞாபகார்த்தமாக திராவிடர் கழகத்தாரால், "குடி அரசு"க்கும், "திராவிடநாடு"க்கும் 6 மாத சந்தா அனுப்பப்பட்டிருக்கிறது. மேற்படி திருமணத்தை முன்னிட்டு மணமகனால் "குடி அரசு", "திராவிடநாடு" [illegible]

கூடலூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மாற்றம்

தற்பொழுது கூடலூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக உள்ள ராவ்சாஹிப் ஜெ. பாக்கியநாதன் அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளப் போவதாகவும் அவரிடத்திற்கு வர அப்பள்ளியிலேயே வேலை பார்த்து வரும் ஒரு ஆரியர் பெரும் பாடுபட்டு வருவதாகவும் தெரிகின்றது. ஏற்கனவே, ஒருவர் தவிர ஏனைய ஆசிரியர்கள் எல்லாம் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். இந்நிலையில் தலைமை ஆசிரியரும் ஓர் பார்ப்பனராக வந்தால், திராவிட மாணவர்களுடைய முன்னேற்றம் முயற்கொம்புதான் என்பதை நினைத்தும், சென்ற நகராட்சித் தலைவர் தேர்தலின் போது ஓர் திராவிடர், தலைவராக வரக்கூடாதென்று பார்ப்பனர்கள் எவ்வளவு சூழ்ச்சி செய்தனர் என்பதை மனதில் இருத்தியும், நகராட்சித் தலைவரும், ஏனைய நகராட்சி உறுப்பினர்களும் ஓர் திராவிடரை மேற்படி பள்ளிக்குத் தலைமையாசிரியராக நியமிக்க ஏற்பாடு செய்யுமாறு மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஓர் பழய மாணவன்.

தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கம்

11-6-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு ஷை சங்கக் கட்டிடத்தில் தோழர் பி. பீட்டர் தலைமையின் கீழ் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட நிர்வாகஸ்தர்கள் 1944, 45 வருடத்திற்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எம். ஆண்டி தலைவர்; எம். ராமசாமி உபதலைவர்; எஸ். ஜான் டேவிட் காரியதரிசி; கே. சுப்பையா உபகாரியதரிசி; எஸ். காருண்யம் பொக்கிஷதார்; எஸ். ஆர்தர் ஆப்ராகாம் கௌரவ ஆடிட்; மற்றும் 15 கமிட்டி மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாண்மங்கல அழைப்பு

தில்லைவட்டம் வெள்ளியக்குடியில் "திராவிடநாடு" ஆசிரியர் தோழர் சி. என். அ. அவர்கள் தலைமையில் நிகழ்ந்த திருமணத் தம்பதிகளாகிய சிவகாமி—முருகேசன் இருவருக்கும் பிறந்த பெண் மகவுக்கு 21-7-44-ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெறும். தோழர்கள் [illegible] வேண்டுகிறோம்.

இராமாயணச் சொற்போர் எப்பொழுது?

கூடலூர் ப. ப., ஜூன். 14—

13-5-44-ல் மஞ்சகுப்பம் மைதானத்தில் திருப்பாதிரிப்புலியூர் தோழர் து. பாலகிருட்டின சங்கரய்யா அவர்கள் தலைமையில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழன்பர் திருமாண்டைக்குழி தோழர் வடிவேல் பூபதி என்பார் இராமாயணம் குறித்து திராவிடர் கழகத்தாரோடு ஒரு திங்களுக்குள் சொற்போர் நடத்தத் தாம் ஏற்பாடு செய்வதாகப் பொது மேடை ஏறிச் சூள் உரைத்துச் சென்று ஒரு திங்கள் கழிந்தும் இன்னும் அதற்கான ஏற்பாடு செய்யவில்லை என்பதை அன்பர்கள் அறியவேண்டுகிறோம். சூள் உரைத்த தோழர் தம் சொல் காப்பாற்றாதது வருந்தத்தக்கது.

திராவிடர் கழகத்தார்,
கூடலூர் பழையபட்டினம்.

ஞானாம்பாள்-சின்னத்தம்பி

11-6-44 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கூடலூர் மாலுமியார் பேட்டையில் காவேரிப்பட்டினம் மாரிமுத்து படையாச்சி புதல்வி ஞானாம்பாளுக்கும் மாலுமியார்பேட்டை கோவிந்தசாமி படையாச்சி புதல்வன் சின்னத்தம்பிக்கும் தோழர் வை. சிதம்பரநாதன் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் நடந்தேறியது. தோழர்கள் பி. தியாகராசன், வை. சிதம்பரநாதன், மா. பீட்டர் பி. ஏ., ஆ. திராவிடமணி பி. ஏ., கி. வீரமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். நடன அரசு அழகராசன், இளவழகன் ஆகியோர் சீர்திருத்தப் பாக்கள் பாடினர்.

பிறப்பு

திருச்சி துறையூர், தன்மதிப்பு இயக்கத் தோழர் கே. சுந்தரம் (Clerk Coaching Audit) அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் கமலம்மாளுக்கு 30-5-44-ஆந் தேதி ஓர் ஆண் மகவு பிறந்தது. 11-6-44-ல் சுயமரியாதைச் சுடர் லெட்சுமணன் செட்டியார் (உறையூர்) தலைமையில் அக்குழந்தைக்கு அண்ணாதுரை என்று பெயரிடப்பட்டது. தோழர்கள் டி. கே. சீனிவாசன், என். மாணிக்கவாசகம், சுப்பரமணி, என். ராமசாமி முதலியோர்கள் புரோகித ஒழிப்பின் அவசியத்தைக் குறித்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பின்னர் வெகுமதிகள் பல தோழர்களால் வழங்கப்பட்டது. அன்று மத்தியானம் சமபந்தி விருந்து சிறப்பாக நடைபெற்றது. [illegible] ஈ. வெ. ரா. [illegible]

மதிப்புரைகள்:

"முன்னேற்றம்" ஹிஜ்ஜிரி மலர்

திருநெல்வேலி மாவட்ட முஸ்லிம் லீக் கமிட்டியினரால் வெளியிடப்படும் மத சஞ்சிகையான "முன்னேற்றம்" சஞ்சிகையின் ஹிஜ்ஜிரி மலர். ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இதில் பல அறிஞர்கள் கட்டுரைகள் மலிந்து கிடக்கின்றன. முஸ்லிம் லீக்கின் வரலாற்றையும் காங்கரசுக்கும் லீக்குக்கும் இருந்த சம்பந்தத்தையும், காங்கரசுடன் ஒத்துப்போக ஜனாப் ஜின்னா அவர்கள் எவ்வளவு தூரம் முயன்றார்கள் என்பதையும் இந்து முஸ்லிம் ஒற்றுமையை குலைத்தவர்கள் யார் என்பதையும் இம்மலர் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. முஸ்லிம்களும் திராவிடர்களும் இதை ஆதரித்து வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

'ஆசனப் பயிற்சி முறைகள்'

ஆசிரியர்: தி. க. க. தங்கம் பிள்ளை பீமநகர், திருச்சி.

விலை அணா 12.

மேற்படி புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. "உடம்பைப் பாதுகாக்க முயன்ற நான், முதலில் உடற்பயிற்சி செய்தேன். முடிவில் அது என்னை யோகாசனப் பயிற்சியிற் கொண்டுவந்து நிறுத்தியது" என்பதாக இப்புத்தகத்தின் ஆசிரியர் தமது முன்னுரையில் எழுதியிருக்கிறார். எனவே, உடம்பை பாதுகாக்க யோகாசனப் பயிற்சி தேவை என்பதாக இவ்வாசிரியர் கண்டிருக்கிறார். அவர் கொண்ட கருத்தின்படி அவரால் செய்யக்கூடிய ஆசனப் பயிற்சிகளை இச்சிறு நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். உடல் நலம் வேண்டும் என்போருக்கு இந்நூல் பயனளிக்கும் என்று கருதுகின்றோம்.

"பெரியார் பெருந்தொண்டு"

ஆக்கியோன்: சிவப்பிரகாசம், தமிழாசிரியர், புதுவை.

வெளியிட்டோர்: பூங்கொடிப்பதிப்பகம் 43, சேன்த்தெரேஸ் மட்டு வீதி, புதுவை.

விலை: அணா 8.

ஷை புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. பெரியார் அவர்களின் பெருந்தொண்டுகளைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் தெளிவான முறையில், எளிய நடையில் விளக்கியிருக்கிறார். தோழர் சிவப்பிரகாசம், சி[illegible] [illegible]

பற்று மிகுதியுமுடையவர். அந் நாள் முதல் இன்றுவரை எல்லா இன்னல்களையும் எதிர்ப்புகளையும் எதிர்த்துக் கொண்டு தாம் கொண்ட கருத்தையும் கொள்கையையும் விடாமல் கடைப்பிடித்துவருகிறார். இதனை அவரது இச் சிறு புத்தகத்தில் நன்கு காணலாம், ஆரியத்தின் மீதும் ஆரிய ஆட்சியின் மீதும் எவ்வளவு வெறுப்புக் கொண்டிருக்கிறார் என்பதை இப்புத்தகத்தில் நன்கு காணலாம். அவரது ஊக்கம் அதிகரிக்கவும் அவரது ஆசை நிறைவேறவும் தமிழர்கள் செய்யவேண்டியது, அவரது இப்புத்தகத்தைப் பெரிதும் ஆதரித்து வாங்கிப் படிப்பதுதான். இதனைத் தமிழர்கள் செய்யத் தவறமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

"இசையமுது"

தமிழர்க்கு, அறிவுரைகளை வழங்கும் 'இசையமுது' என்னும் இன்னிசைப் பாடல் தொகுதியை வெளியிட்டுள்ளார்கள் கோனாப்பட்டு முத்தமிழ் நிலையத்தார்கள்.

புத்துலகச் சிற்பி பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் அருங் கொள்கைகளை அழகாகவும், ஆழமாகவும், இயற்பாவிலும், இசைப்பாவிலும் அமைத்திடும் புரட்சிக் கவி, புதுமைப் புலவர், புதுவை வாழ் அறிஞர் பாரதிதாசன் அவர்களின் 'இசையமுது' தமிழக மறுமலர்ச்சியில் முதல் முத்தமிழ் மலராகத் தோன்றியிருப்பதும், இன்னும் பல தொடர்ந்து வெளிவரும் என்ற செய்தியும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

நாயினுங் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதைக் கண்ட கவிஞர் தாயின் மேல் ஆணை, தந்தை மேல் ஆணை என ஆரியத் தினை நீக்கச் சூளுரைத்து கமழும் நம் இன்பத் தமிழில் அன்பு தோன்ற துன்பந்தொலைய, தமிழனே நீ கேளாய் என பல வாளாய்ச் சாற்ற நினைத்து இசையமுதாய் வழங்குகின்றார் உணர்ச்சி வெள்ளத்தை. முத்தமிழிலும் மறுமலர்ச்சி காண 'இசையமுது' வித்தாக அமைந்துள்ளது.

தமிழர்கள் 'அமுத'மெனப் போற்றிச் சுவைத்து மகிழ விழைகின்றோம்.

விலை ரூ. 1-4-0

நிகை

திராவிட நடிகர் கழகம்

20-ஆந் தேதி மாலை 3-30 மணிக்கு திராவிடர் கழகக் கட்டிட மாடியில் தோழர் டி. கே. விஜயராகவலு பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையின் கீழ் வேலூர் தோழர் சி. பி. சின்னராசு, திராவிட நடிகர் கழகம் திறந்து வைப்பார்.

மறைவு

ஈரோடு பிரபல சைக்கிள் வியாபாரம் தோழர் ஈ. குப்புசாமி முத்திரியர் அவர்களின் மனைவி மாக்கொளுந்தம்மாள் சென்ற 12-6-44-ஆந் தேதி காலை தன் இல்லத்தில் காலமானார். அன்னார்க்கு 4-குமாரத்திகளும், 1-குமாரனும் இருக்கிறார்கள். இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

பாரதிதாசன்

இயற்றிய எல்லா நூல்களும், மற்றும் பல புத்தகங்களும் எம்மிடம் கிடைக்கும்.

P. ஷண்முகவேலாயுதம்,
புதுமை முத்தமிழ் புத்தக நிலையம்,
ஈரோடு.

தேவை

ஹையர் கிரேட் ட்ரெயினிங் பாஸ் செய்தவரும், சுயமரியாதைக் கொள்கையுடையவரும், முழுப்பொறுப்புடன் நிலையாக இருந்து வேலை செய்ய விருப்பமுள்ளவருமான ஆசிரியர் தேவை.

உண்மை விளக்கம் கல்வி நிலையம், ஈரோடு.

இராமாயண பாத்திரங்கள்

இராமன் கடவுளா? யோக்கியனா? சீதை கற்புக்கரசியா? இராமாயணம் தெய்வகதையா? தமிழர்களுக்கு நீதியா? என்பவை விளங்கவேண்டுமா?

இராமாயணக்கதையின் கருத்தையும் அதன் துவக்கத்தையும்பற்றி பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களால் விளக்கியும் இராமாயணத்தில் வரும் முக்கிய பாத்திரங்கள் (நபர்கள்) பற்றி வால்மீகி எழுதியுள்ளவற்றை தனித்தனியாக ஒவ்வொரு பெயராகக் குறிப்பிட்டு அவர்களது யோக்கியதையை எண்ணிக்கை வாரியாக விளக்கியும் எழுதியுள்ள புத்தகம். வாங்கிப்படியுங்கள். 50 பக்கங்கள், விலை 3 அணா, வேண்டியவர்கள் 4 அணா[illegible]

மன்னர் பிறந்த நாள்

சென்னை மாகாணத்தில் பட்டம் பெற்றவர்கள்

மன்னர்பிரான் பிறந்த நாள் வைபவத்தைமுன்னிட்டுசென்னை மாகாணத்தில் கீழ்க்கண்டவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன:-

சர்

திவான்பகதூர் எம். பாலசுந்தரம் நாயுடு வியாபாரம், சென்னை.

கேய்சரி-இ-ஹிந்தி

வெள்ளிப் பதக்கம்

ரெவரண்டு எச். ஏ. பாப்லி, பிரின்சிபால், லண்டன்மிஷன் டிரயினிங் ஸ்கூல், ஈரோடு.

திவான்பகதூர்

ராவ்பகதூர் எஸ். ஜி. கிரப், மாகாண உணவுப்பொருள் கண்ட்ரோலர், சென்னை; ராவ்பகதூர் பி ஆவுடையப்ப பிள்ளை, வக்கீல் திருநெல்வேலி.

கான்சாஹிப்

டப்பதார் அப்துல் ரவூப் சாஹிப் பகதூர், மெம்பர், சென்னை.

ராவ்பகதூர்

தோழர் எஸ். ஜோஸப் ரெட்டி, டிபுடி கலெக்டர், சென்னை; தோழர் சி. துரைசாமி கவுண்டர், கம்மர்ஷியல் டாக்ஸ் ஆபீசர், மதுரை; ராவ்சாகிப் ஆல்பர்ட் ஜேசுதாசன், சென்னை நகர ஆர் கனைசர், N. W. F., சென்னை; தோழர் ஏ. டி. கிருஷ்ணசாமி முதலியார், சேர்மன், முனிசிபல் கவுன்சில், கோயமுத்தூர்; தோழர் டி. எஸ். சாந்திமதிநாதபிள்ளை, சேர்மன், முனிசிபல் கௌன்சில், திருநெல்வேலி.

ராவ்சாகிப்

தோழர் சி. என். சுகுணானந்த முதலியார், மிராசு அண்டு வியாபாரம், ஆரணி, வட ஆற்காடு ஜில்லா; தோழர் டி. ஆர். கோதண்டராம முதலியார், அட்வகேட், சென்னை; தோழர் டி. ஏ. வி. நாதன், ஆசிரியர், 'சென்னை யுத்த சஞ்சிகை, சென்னை; தோழர் சி. மாசிலாமணி நாடார், வியாபாரம், தூத்துக்குடி; தோழர் டி. எஸ். பழனியப்ப பிள்ளை, புகையிலை வியாபாரம், குண்டூர்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காலில் நூற்கும் அளவுக்கு நெசவும் இருந்திருந்தால் துணிப் பஞ்சம் ஏற்பட்டிருக்காது. நமக்கு நிறைய நெசவு மில்கள் வேண்டும்.

இச்சமயத்தில் சர்க்கார் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். யுத்த காலத்தில் நாட்டின் பொருளாதார இயந்திரத்தை நடத்திச் செல்ல கட்டுப்பாடுகள் அவசியம் தான். ஏறிக்கொண்டே போகும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை சமமாக விநியோகிக்கவும் இம்மாதிரி கட்டுப்பாடுகள் அவசியம். சாதாரண மனிதனுக்கு துணி கிடைக்கும்படி செய்ய வேண்டுவது, சர்க்கார், துணி உற்பத்தி செய்வோர், வியாபாரிகள் ஆகியவர்களின் கடமையும் பொது நோக்கமாகவும் இருக்க வேண்டும். இதுவரையில் இத்துறையில் அடைந்த வெற்

திருச்சி கி. ஆ. பெ.

திருச்சி, ஜூன். 11-

தோழர் கி. ஆ. பெ விசுவநாதம் அவர்களுக்கு உடல்நலம் பரிபூரணமாகிவிட்டது தோழர்கள் பொன்மலை மளிகை டி. என். நடேசம் பிள்ளை, கும்பகோணம் கே. கே. நீலமேகம், எம். பி. பாலசுப்பிரமணியம் முதலியவர்கள் காணச் சென்றார்கள்.

பட்டுக்கோட்டையில் பதிவுத் திருமணம்

பட்டுக்கோட்டை 'நூர்ஜகான்' மோட்டார் உரிமையாளர் தோழர் என். மருதமுத்து மகளும், பட்டுக்கோட்டை மிராசு தோழர் என். ரெத்தினசாமி வளர்ப்புக் குமாரியுமான தோழர் நூர்ஜகானுக்கும் திருத்துறைப்பூண்டி ஆசிரியர் தோழர் கே. ராமச்சந்திரம் பிள்ளை மகன் தோழர் ஆர். சோமசுந்தரத்துக்கும் 25-6-44 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்குப் பட்டுக்கோட்டை காசாங்குளம் அரிசிக்காரத் தெரு மணமகள் இல்லில் தஞ்சை ஜில்லா ரிஜிஸ்ட்ராரவர்கள் முன்னிலையில் பதிவுத் திருமணம் நடைபெறும்.

எவ்விதப் பரிசுகளும் அளிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

...ழர்கள் பலரின் சரியான ... தவர் ...

ஓமலூர் தாலுக்கா திராவிட இளைஞர் மாநாடு

சலகண்டபுரம், ஜூன். 11-

7-6-44-ல் மேற்படி மாநாட்டின் நிர்வாகக் கழகம், வரவேற்புக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் வீர-பாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தாலுக்கா முழுதும் பிரதிநிதித்துவமுள்ள நிர்வாகக் கழகமும், வரவேற்புக் கழகமும் அமைக்கப்பட்டன. மாநாட்டை ஜூன் மாத இறுதிக்குள் சலகண்டபுரத்தில் நடத்துவதென்றும், திராவிட நாட்டுத் தலைவர் பெரியார் இராமசாமி, பழைய கோட்டை இளையபட்டக்காரர் ந. அர்ச்சுனன், க. அன்பழகன், சேலம் ராஜாராமலிங்கம், சி. பி. சின்னராசு ஆகியவர்களை அழைப்பதென்றும் முடிவுகள் செய்யப்பட்டன. தோழர்கள் வீர-பாலன், த. முருகன் இருவரும் மாநாட்டின் செயலாளர்களாகவும், தோழர் ப. கண்ணன் ஜி. பி. கே. அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராகவும், தோழர் அ. மு. அண்ணாமலை அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தாலுக்கா முழுதும் மாநாட்டிற்கு நல்ல ஆதரவு இருக்கிறது.

துறையூர் அச்சுத் தொழிலாளர் சங்கம்

துறையூர் அச்சுத் தொழிலாளர்கள் அனைவரும், தங்களுக்குள் ஒற்றுமையை வலியுறுத்தவும் நிலையை உயர்த்தவும் மற்றும் தேவைகளை கவனிப்பதற்காகவும், கூடி மேற்படி சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது 9-6-44 அன்று ஆரம்பமாயிற்று. தங்கள் பொது அறிவை விசாலமாக்குவதற்காக அவ்வப்போது அறிஞர்களின் சொற்பொழிவு நிகழ்த்தவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

புது மனை புகுதல்

புகளூர், கட்டிபாளையம் தோழர் கொ. ப. ஆறுமுக முதலியார் மகன் தோழர் கருப்பண்ணன் அவர்கள் தாம் கட்டின புதிய வீட்டில் குடிபுகுதும் விழா தோழர் வித்வான் கண்ணப்பரால் நடத்திவைக்கப்பட்டது. அதை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு நன்கொடை ரூ. 1 அளிக்கப்பட்டது.

மதமும் மூடநம்பிக்கையும்

திருப்பத்தூர், (ராமநாதபுரம்)

11-6-44 இவ்வூர் தமிழர் கழகத்தின் சார்பில் தோழர் முத்து முகமது அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மகாலிங்கம், இராவணன், சங்கரநாராயணன், சுப்பய்யா முதலியவர்கள் மதமும் மூடநம்பிக்கையும் எனும் பொருள் பற்றிப் ... பிரசங்கித்தனர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தமிழ் நாட்டுச் செய்திகள்

சிவகங்கை பொது நோக்கத்தார் கழகத்தில் 3-6-44ல் தோழர் மு. கற்பூரசுந்தரபாண்டியன் பி. ஏ. தலைமையில் நடந்த கூறப்புக் கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) 'கலைநிலை' என்பதுபற்றிப் பேசினார். தோழர் இள. இராமசுப்பிரமணியம் பி.எஸ்சி. நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

ஷியூர் புலமைய மாணவர் கழகத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு 4-6-44 தேதி ஜனாப் மகம்மது இப்ராஹீம் சாகிப் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் அன்பழகன் 'ஆற்றோரம்' என்பதுபற்றிப் பேசினார்.

அன்று இரவு 10 மணிக்கு 'வெற்றி' என்ற சீர்திருத்த நாடகம் மாணவர் பலரால் மிக அழகாக நடத்தப்பட்டது. இதில் தோழர்கள் க. சத்தியேந்திரன், இரா. சண்முகநாதன், ஐ. நயினாமுகம்மது பி. ஏ., முதலியவர்கள் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டு 'வெற்றி'க்கு வெற்றியளித்தார்கள். 'சோம்பேறி மகாநாடு' என்னும் காமிக் இரா. தியாகராஜன் முதலியோரால் நடிக்கப்பட்டது.

ஃ ஃ

குடந்தை பேட்டைத்தெரு, தமிழ் இளைஞர் கழகத்திறப்புவிழா 24-5-44ல் தோழர் க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களால் ஆற்றிவைக்கப்பட்டது. தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, ஜி. ரோஸ் அம்மையார், க. அன்பழகன் ஆகியோர் திராவிடநாட்டுப் பிரிவினையும் புராணப் பொய்மையும் என்பதுபற்றிப் பேசினார்கள். தமிழரசன் பாடல்கள் பாடினார்.

ஃ ஃ

ஜெயங்கொண்ட சோழபுரம் மாரியம்மன் கோவில் முன்னிலையில் 2-6-44ல் திராவிட கழகத்தின் பொதுக்கூட்டம் தோழர் எ. பெத்துசலா ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. வேலூர் தமிழாசிரியர் தோழர்கள் வை. பொன்னம்பலனார், எம். பாஸ்கரன் முதலியவர்களால் தமிழர் சிறப்பு, ஆரியக்கொடுமை முதலியவைபற்றி விளக்கப்பட்டது. போரில் சேர்ந்துள்ள இத்தாலுகா வாசிகளின் சேவையைப்பாராட்டியும், ராணுவசேவை செய்பவர்கள் விரும்பும்போதும், பயிற்சி முடிந்தவுடனும் அவர்களுக்கு லீவு கொடுத்து அனுப்புவதோடு, மற்றுமுள்ள சௌகரியங்களையும்செ... கொடுக்குமாறும் கேட்டுக்கொ...

சீர்திருத்தத் திருமணங்கள்

பேளாகடம்: 8-6-44—ஆம் தேதி தோழர் துரைசாமி பிள்ளை அவர்கள் புதல்வர் தோழர் சோமசுந்தரம் அவர்களுக்கும், திட்டைகுடி தோழர் சங்கரசிப் பிள்ளை அவர்கள் புதல்வி தோழர் இலக்குமிக்கும் திருமணம் நடந்தது. அதுசமயம் சிவகுருநாதன் கழகத்தாரால் ஒரு வாழ்த்துப்பாவும் வெள்ளிக் கோப்பையும் கொடுக்கப்பட்டது. மற்றும் பல தோழர்களால் வாழ்த்துரைகளும் வெள்ளிக் கிண்ணங்களும், புத்தகங்களும் அளிக்கப்பட்டன.

ஃ ஃ

திருச்சி: தமிழ்நாடு விதவா விவாக சங்க ஆதரவில் 5-6-44-ல் கருணாநிதி பார்க்கில்வழக்கறிஞர்தோழர்சந்திரசேகர உடையார் தலைமையில் தோழர்கள் த. பஞ்சநாதம் பிள்ளைக்கும், தா. மீனாம்பாளுக்கும் விதவை மணம் நடைபெற்றது. பா. செகதாம்பாள் விதவை மண கீதம் பாடினார். விதவை மணம் அவசியத்தைக் குறித்து எஸ். பார்வதி, ராஜன், ஜெகநாதன், எஸ். மணி, ஆர். சலைமான், சுப்பிரமணியம், எஸ். சிவலிங்கம் முதலியோர் பேசினர். "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை வழங்கப்பட்டது.

ஃ ஃ

தஞ்சை: 5-6-44-ல் பிரபல வியாபாரம் தோழர் வே. மாரியப்ப நாடார் இல்லத்தில் திருச்சி தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் காரைக்கால் தோழர் கோ. கோவிந்தசாமி நாடார் குமாரர் சுடலைமுத்து நாடாருக்கும், தஞ்சை பழக்கமிஷன் ஏஜண்டு தோழர் கே. வி. என். சீனியப்ப நாடார் அவர்கள் குமாரத்தி தோழர் புஷ்பத்திற்கும் ரிஜிஸ்டர் திருமணம் நடைபெற்றது. மலர் மாலை சூட்டப்பட்டு, திருமங்கல்யம் கட்டப்பட்டு திருமண வைபவம் முடிவுற்றது. சுயமரியாதை மணம் என்பது பற்றியும், தன்மதிப்பியக்கம் என்பது பற்றியும் தோழர்கள் சி. பி. சின்னராசு, கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, திருப்பூர் குருராமலிங்கம், ஸ்ரீ கீடாமங்கலம் ஆறுமுகம் முதலியவர்கள் பேசினார்கள். தலைவருக்குத் திருமணத் தம்பதிகளால் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ 0-8-0 நன்கொடையளிக்கப்பட்டது.

ஃ ஃ

திருக்கழுக்குன்றம்: தேசமுகிப்பேட்டையில் சென்ற 1-6-44-ல் தோழர்... ...வேல் தம்பதிகள்...

நாகூர் திராவிடர் கழகம்

மேற்படி கழகத்தின் கூட்டம் 6-6-44-ம் தேதி தோழர் என். சிங்காரவேலு தலைமையில் நடைபெற்றது. சென்ற கூட்டத்தின் அறிக்கையும் திறப்புவிழா செலவும் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் தோழர்கள் பொ. பழனியாண்டி தலைவராகவும், என். சிங்காரவேலு உதவித் தலைவராகவும், ரெ. கோவிந்தராசு அமைச்சராகவும், எம். கோவிந்தசாமி உதவி அமைச்சராகவும், நா. முத்துசாமி பொருளாளராகவும், என். தங்கவேலு உதவிப் பொருளாளராகவும் 11 பேர்கள் கழக நிருவாக உருப்பினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கழக அங்கத்தினர்களுக்கு மாத சந்தா அணா 4 ஆக ஏற்படுத்தப்பட்டது. பொதுக் கூட்டங்களுக்கு பெரியார், தோழர்கள் அண்ணாதுரை, அன்பழகன், ஜனார்த்தனன், நெடுஞ்செழியன் ஆகியவர்களை அழைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது.

நீத்தார் நினைவு நாள்

சிதம்பரம் தாலுகா சாக்காங்குடி கிராமம் மணமேட்டில் சென்ற ஆண்டு இயற்கையெய்திய தோழர் சிங்காரவேல் சாமிகளின் நினைவு நாளாக 20-5-44-ல் அன்னவர் மடத்தில்வெகு ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டதுடன் தோழர் கே. ஆர். தங்கவேல் அவர்கள் தலைமையில் தமிழர் புது வாழ்க்கை முறைகள் பற்றி பி. கணேசன் பி. ஏ. ஆனர்ஸ்., வை. சம்மந்தம், க. திருமாறன், வெற்றிமால் ஆகிய தோழர்கள் சொற்பெருக்காற்றினர். 'திராவிட நாடு' 'குடி அரசு'க்கும் ஒவ்வொரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

மணத்தை காஞ்சி மணி மொழியாரும் தோழர்கள் அருணகிரி-கமலம்மாள் திருமணத்தை தோழர் மணி மொழியாரும் நடத்திவைத்தனர்.

ஆரிய சடங்குகளைக் கண்டித்தும் ஆரிய சூழ்ச்சிகளை விளக்கியும் தோழர்கள் காஞ்சி மணி மொழியார், மயிலை சிவமுத்துகுமாரசாமி, பா. கண்ணப்ப முதலியார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

அருணகிரி-கமலாம்பாள் திருமண இல்லத்தில் மணமகனின் தமையனார் தோழர் ரா. கோவிந்தராசுவால் பகலில் ஓர் சமபந்தி விருந்து நடத்தப்பட்டது. அன்று மாலை தோழர் நா. குருபாதத்தால் தமிழிசை விருந்து நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் ந. மாணிக்கம், வி. திருநாவுக்கரசு முதலியவர்கள் தமிழிசை, தமிழர் முன்னேற்றம். என்...

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கோவை ஜில்லா உணவுப் பொருள் சங்கம்

ஷை சங்கம் 26-5-44-ல் ஜில்லா கலெக்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்ற மாதங்களில் சப்ளை செய்ததில் மீன்றுபோன 18,000 டன் இன்னும் சப்ளைபாக்கியிருப்பதை எடுத்துக்காட்டப்பட்டது. உணவு தானியங்கள் சேகரிப்புத் திட்டம் அதிக விரைவாக நடக்க பிரத்தியேக உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டுமென யோசனை கூறப்பட்டது.

கால் நடைகளின் உணவு நெருக்கடியைப் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. வெளி ஜில்லாக்களிலிருந்து இறக்குமதி செய்வதின் மூலமாகவும், கட்டாய சேகரிப்புத் திட்டத்தின் மூலமாகவும் கிடைக்கும் புன்செய் தானியங்கள் ஜில்லாவின் தேவைக்கு போதுமானதாக இல்லாதிருப்பதால் கட்டாய தானிய சேகரிப்புத் திட்டத்தின்படி வரும் 10 எக்காரவை 5 எக்காராவுக்குக் குறைக்கவேண்டுமென்று கருதப்பட்டது.

870 மூட்டை ஆஸ்திரேலியன் கோதுமை வந்திருக்கிறதாகவும் உணவுப் பங்கீடு டவுன்களில் சப்ளை செய்யும் பொருட்டு 500 டன் கோதுமைவினியோகம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், கைவசத்தில் 1669 மூட்டை ரவையும், 8,273 மூட்டை மைதாவும் இருக்கிறதென்றும் இதில் ஒரு பகுதியை தற்போது வினியோகிக்கப்படும் என்றும், 1300 டன் துவரையும் பருப்பும் வினியோகம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் 2176 டன் துவரையும், 152 டன் துவரைப் பருப்பும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் ஒதுக்கப்பட்ட 280 டன்னில் 400 மூட்டை உளுந்து தற்போது வந்திருப்பதாகவும் அது அந்தந்த தாலூகாவின் தேவையை அனுசரித்து வினியோகம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டது. 7644 மூட்டை பச்சைக் கடலையும் அதன் பருப்பும் 320 மூட்டை பார்லியும் வந்திருப்பதாகவும் கூறப்பட்டது.

உணவுப் பொருள் அதிகமாய் பயிரிடுவது பற்றி பிரசாரம் செய்வது சம்பந்தமாக யோசிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்ட முதலாவது திராவிட இளைஞர் மாநாடு

வருகிற ஜூலைத்திங்கள் 9-ஆம்நாள் கடைசி ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடியில் மாநாட்டை நடத்துவதெனவும் ஷை மாநாட்டுக்கு பெரியார் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. அன்பழ...

டியேற்றுபவர், திராவிடநாட்டு படத் திறப்பாளர்களாக அழைப்பதென்று வரவேற்பு கமிட்டியாரால் தீர்மானிக்கப்பட்டது.

எஸ். குருசாமி,
ஏ. தவமணி,
செயலாளர்கள்.

திருவள்ளுவர் விழா

குளித்தலை

7-6-44 தேதி தமிழ் மாணவர் கழகத்தின் சார்பில் தோழர் கே. எம். பழனியப்ப முதலியாரவர்கள் தலைமையில் ஷை விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் மணி முத்தச்சாமி குறளைக் குறித்தும், வி. வி. கிருஷ்ணமூர்த்தி குறளோதிய ஆசிரியர் என்பது பற்றியும் பேசினார்கள். தோழர் பி. பிச்சையவர்கள் வணக்கம் கூறினார்.

புதுக்கோட்டை

அறிவு வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் 7-6-44 தேதி ஷை விழா கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் வள்ளுவரின் வாழ்க்கையைப் பற்றியும் குறளின் பாக்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்கள்.

திண்டிவனம்

6-6-44 தேதி ஷை விழா கொண்டாடப்பட்டது. புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் குறள் வி. முனிசாமி பி. ஏ, புலவர் வீர ஆரங்கனார் மற்றும் கழக அங்கத்தினர்கள் ஊர்வலம் நடைபெற்றது.

பின், பரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், குறள் வீ. முனிசாமி பி. ஏ., "பரிமேலழகர் சறுக்கல்கள்" எனவும், புலவர் வீர. அரங்கனார் 'தமிழ் மறை' எனவும், பாரதிதாசன் அவர்கள் 'வள்ளுவருக்கு மதமுண்டா?' எனவும் சொற்பொழிவாற்றினார்கள். கோ. ஆதிகேசவன் நன்றி கூறினார்.

7-6-44ல் இந்நகரில் அரசியல் மருத்துவச்சாலை மருத்துவர் அர்ச்சனன் M. B., B. S., தலைமையில் புலவர் பழனிச்சாமி சிவாச்சாரி "வள்ளுவரும் சீர்திருத்தமும்" எனவும், வீர அரங்கனார் "வள்ளுவனின் வன்னம்" எனவும், குறள் வீ. முனிசாமி பி. ஏ., "வள்ளுவரும் வாலறிவனும்" எனவும் சொற்பொழிவாற்றினர். ஆதிகேசவன் நன்றி கூறினார்.

லால்குடி

திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் 7-6-44-ல் ஷை விழா தோழர் எம். திருவேங்கடம் பிள்ளை பி. ஏ. தலைமையில் கொண்டாடப்பட்டது. பின்னர் 9 மணிக்கு கழக கட்டிடத்தில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர்கள் பண்டித திருநாவுக்கரசு, ஆர். சீனிவாசன், எல். ஆர். பாலசுப்பிரமணியன், எல். ஆர். நம்மாள்வார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் அண்மையில் இயற்கை எய்திய தோழர்கள் ந. மு. வேங்கடசாமி நாட்டார், நெல்லை திருவரங்கம் பிள்ளை ஆகியோரின் பிரிவுக்கு இரங்கற் கூறி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் எல். எஸ். ஆறுமுகம் நன்றி கூறினார்.

ஈரோடு

11-6-44 தேதி கொங்கிலம்மன் கோவில் திருவள்ளுவர் கழகத்தின் ஆதரவில் தோழர் என். ரங்கசாமிசெட்டியார் பி. ஏ., எல். டி., (பள்ளிக்கூடங்களின் டிபுடி இன்ஸ்பெக்டர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காஞ்சிபுரம் தோழர் சு. வஜ்ஜிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி., அவர்கள் "திருக்குறள்" என்பது பற்றியும், ரெவரெண்டு எச். ஏ. பாப்ளி பி. ஏ., அவர்கள் 'திருவள்ளுவரின் நன்னெறி கற்பனைகள்" என்பதுபற்றி விளக்கிப் பேசினார்கள். தோழர் ஈ. பி. வெங்கடாசலம் நன்றி கூறினார்.

பணம் பிடுங்கிப் பார்ப்பனர்

'பணம் பிடுங்கிப் பார்ப்பனர்' என்னும் 100 பக்கங்கள் கொண்ட புத்தகம், பார்ப்பனர்கள் செத்தவர்களின்பெயரால்-சாகப்போகிறவர்களின்பெயரால் எப்படியெல்லாம் பணம் பறித்து, எப்படியெல்லாம் நல்வாழ்வு வாழ்கின்றார்கள் என்பதை அனுபவ ஆதாரத்தைக் கொண்டும், கதைகள், சம்பாஷணைகள், நடிப்புகள் ஆகியவைகளைக்கொண்டும் நகைச்சுவைகளுடன் விளக்கும் அருமையான புத்தகம். இதில் கா. நமசிவாய முதலியார் எழுதிய கதைகள், நடிப்புகள், பெரியார், சித்திரபுத்திரன், பேரால் எழுதிய சம்பாஷணை-ஆராய்ச்சி வியாசம் ஆகிய பலவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

விலை அணா ஐந்து
...ணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தஞ்சை மாவட்ட திராவிட வாலிபர் மாநாடு

தஞ்சாவூர், ஜூன். 10—

தஞ்சையில் இம்மாதம் கடைசி வாரத்தில் தோழர் டபுள்யு, பி. ஏ, சௌந்தர பாண்டியன் அவர்கள் தலைமையில் நடத்த தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அதில் பெரியார் ஈ. வெ. ரா., தோழர்கள் வி. வி. ராமசாமி நாடார், டி. பி. வேதாசலம் பி. ஏ., சி. என். அண்ணாதுரை எம். ஏ., சி. பி. சின்னராசு, புரட்சிக்கவி பாரதிதாசன், கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, ரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (Hons), ஜனார்த்தனம் பி. ஏ., மற்றும் பலரும் கலந்து கொள்ளுவார்கள்.

இந்த மாநாடு வெற்றிகரமாக முடியவும், அண்மையில் நடைபெறப் போகும் மாகாண மாநாட்டில் நமது ஜில்லாவின் நோக்கத்தை எடுத்துச் சொல்லவும், இந்த ஆண்டு முடிவிற்குள் நமது நோக்கங்களை செயல் முறையில் செய்துகாட்ட ஒரு கட்டுப்பாடான கமிட்டி அமைக்கவும், இந்த மாநாடு வழிக்காட்டும் முறையில் வெற்றிகரமாக நடைபெறவும் அன்பர்கள் அனைவரும் பொருளுதவி செய்து இளைஞர்கள் முயற்சியை மென்மேலும் ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எம். எம். நடராசன்,
காரியதரிசி.

சேந்தமங்கலம் மருத்துவர்குல சங்கம்

திருச்சியில் 22-5-44ல் நடைபெற்ற மாகாண மருத்துவர் மாநாட்டின் தீர்மானங்களை யொட்டி சென்ற 29-5-44 தேதி தீர்மானித்திருந்தபடி நாமும் நம் மருத்துவர்களும் இனி நாம் செய்யும் கடமை என்பது பற்றியும் சேந்தமங்கலம் எஸ். எஸ். ஆனந்தம் பேசினார். அதன் பிறகு நாமக்கல் மருத்துவகுல சங்க மானது முறையே மாதாந்திர கூட்டங்கள் கூடாது அம்மாவாசை தினமும் தொழில் செய்வதையும் ஒற்றுமையில்லாமலும் இருந்து வருவதையும் சேலம், ராசிபுரம், சேந்தமங்கலம் போன்ற பல சங்க பிரதிநிதிகள் நாமக்கல்லில் ஒரு பொதுக்கூட்டம் கூடி அந்த ஊர் சங்கமும் மருத்துவர்களும் மற்ற ஊர்களைப் போல ஒற்றுமையாயிருந்து வாழ வேண்டுவன செய்ய ஜில்லா சங்கத்தை வேண்டுகிறதென்றும், மருத்துவர்களில் பலர் வைத்தியம் செய்பவர்களை தன்மானம் கருதும் ஒவ்வொரு ஊர்களும் ஷை வைத்தியர்களை ஆதரிக்க ...

தமிழர் நல்வாழ்க்கைக் கழகம், சென்னை

இக்கழக ஆண்டு உறுப்பினர் கூட்டம் 4-6-44-ல் தியாகராயநகர் கல்வி நிலையத்தில் கூடி பின் வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறியது.

இசை மன்றங்களில் தமிழர்கள் தமிழ்ப் பாட்டுகளைக் கேட்க விரும்புவது இயற்கையாயிருக்க அது கூடாதென்று ஒரு சிலர் மறுத்துரைப்பது இயற்கைக்கு மாறானதென இக்கழகம் கருதுகிறது.

கழகத்தின் நோக்கங்களைப் பரப்பும் நோக்குடன் சென்னையில் திங்கள் ஒரு முறையும், வெளியூர்களில் மூன்று திங்களுக்கு ஒரு முறையும் கூட்டங்களைக் கூட்டி மக்களுக்கு அவைகளை எடுத்துரைப்பதென முடிவு செய்துள்ளது. சென்னையில் முதல் கூட்டம் முத்தியாலுபேட்டையிலும் ஜூலைத் திங்களில் திருவத்திபுரத்திலும் கூட்டங்களை கூட்டிவைக்க வேண்டுமென முடிவு செய்துள்ளது.

இக்கழக இரண்டாவது மாநாட்டை செங்கல்பட்டில் அடுத்த திங்களில் கூட்டுவதென தீர்மானித்தது.

மோகனூர் தேவேந்திரகுல இளைஞர் சங்கம்

ஷை சங்கத்தின் 4-ஆவது ஆண்டு விழா 6-6-44-ஆம் தேதி மோகனூரில் சேலம் ஜில்லா போர்டு தலைவர் கே. ஏ. நாச்சியப்பகவுண்டர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் நாமக்கல் ரெங்காச்சாரி, மாயனூர் எஸ். சாம்பசிவம், மோகனூர் எம். பி. பெரியசாமி, கொமரிபாளையம் பஞ்சாயத்துக் கோர்ட்டு தலைவர் எஸ். பழனியப்பகவுண்டர், நாமக்கல் எஸ். சின்னையன், மோகனூர் எம். பி. கந்தசாமி, கொடுமுடி கே. எஸ். நாராயணன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

கல்விப்பணி குலசேகரன்பட்டினம்

சென்னைப் பல்கலைக் கழக வித்வான் வருகைத் (Enterance) தேர்வுக்கும் மெற்றிகுலேஷன் ஆங்கிலத் தேர்வுக்கும் இராமநாதனார் கல்விக் கூடத்தில் மாணவ, மாணவியர்கள் கற்பிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட இரு தேர்வுகளிலும் தேறியவர்கள் இன்டர்மீடியேற்; பி. ஏ; பி. ஏ. ஆனர்ஸ்;

"குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

3 அணா புத்தகங்கள்

இரண்டு வழிகள் (இங்கர்சால்)
சீர்திருத்த மார்க்கம் (,,)
மேயோகூற்று மெய்யா பொய்யா?
புராண ஆபாசங்கள் (தர்மபரீட்சை)
பேய்-பூதம்-பிசாசு
மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?
பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.)
மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்
பிரபஞ்சஉற்பத்தி
நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
நான் சம்சயவாதி ஆனேதன்?
பொதுவுடைமைத் தத்துவங்கள்
தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி
மறுப்புக்கு மறுப்பு (சாமி வேதாசலம் குறிப்பு)
பெண்ணுரிமையும் மதமும்

4 அணா புத்தகங்கள்

இராமாயண ஆராய்ச்சி
,, பால காண்டம்
,, ஆரண்ய காண்டம்
,, கிட்கிந்தா காண்டம்
பெண் ஏன் அடிமையானாள்? (ஈ-வெ-ரா)
பகுத்தறிவு அல்லது மரண சாஸனம் முதல் பாகம்
ஷை இரண்டாம் பாகம்
மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?
மதப்புரட்சி
வால்டையரின் வாழ்க்கைச் சரிதம்
விவசாய இந்தியா
விவாக விடுதலை
பரிணாமவாதம்
இந்தியமாதா
பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை
இங்கர்சால் பொன்மொழிகள்
ஜாதியை ஒழிக்கவழி (டாக்டர் அம்பத்கார் எழுதியது)
சோதிட ஆராய்ச்சி (ஈ. வெ. ரா.)
பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)
கடவுளும், பிரபஞ்சமும்
வள்ளுவர் குறளும் ஈ. வெ. ரா. வாழ்க்கையும்

6 அணா புத்தகங்கள்

மனிதன் என்றால் என்ன?
சர்ப்ப ஆட்சி
மெய்ஞ்ஞானமுறையும், மூடநம்பிக்கையும் 1-ம் பாகம்
இரண்யன் அல்லது இணையற்றவீரன்

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.